விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 19 வியாழக்கிழமை (04.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## சம்பந்தனின் தலைமைத்துவத்தின் கீழ்

# தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்காது

### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமைத் துவத்தின் கீழ் அவரது காலத்தில் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என்ற சாத்தியங்கள் தென்படவில்லை என வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். ▷23

## தூக்கை ரத்து செய்யக் கோரி

### பாராளுமன்றில் பிரேரணை

(கொழும்பு)

மரண தண்டனையை ரத்து செய்யும்நோக்கில்பாராளு மன்றில் பிரேரணை ▷23

### சமூகவலைத்தளங்கள்

## உலகெங்கும் முடங்கியது

### இலங்கையிலும் பாதிப்பு

(கொழும்பு)

உலகெங்கிலும் சமூக வலைத்தளங்களான வட்சப், இன்ஸ்டக்கிராம் மற்றும் பேஸ்புக் பாவனையில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங் ▷23

## மரண தண்டனைக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும் பில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளின் ▷23

## நாட்டில் நல்லாட்சியை உருவாக்க மகா சங்கத்தின் வழிகாட்டல் அவசியம்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

மன்னர் காலத்தை போன்று நாட்டில் நல்லாட்சியை கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் அறிவுரை, ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய செயற்படுவது மிக முக்கியம் என்பதை உணர்ந்து அன்றும் இன்றும் தான் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பிற்பகல் உடரட்ட அமரபுர சங்க சபைக்கு சொந்தமான மகாவலி நதிக் கரையில் நிர்மாணிக் ▷23

### பூஜித, ஹேமசிறியின்

## விளக்கமறியல் 9ஆம் திகதிவரை நீடிப்பு

(கொழும்பு)

சி.ஐ.டி.யினரால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடு முறையில்உள்ளபொலிஸ் ▷23

## திருமலையில் 5 மாணவர்கள் சுட்டுப் படுகொலை வழக்கு

### சந்தேகநபர்கள் அனைவரும் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலை கடற்கரையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் விசேட ▷23

### ஹிஸ்புல்லாவிடம்

## புலனாய்வினர் நேற்று விசாரணை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் ▷23

### யாழ்.சங்கானை பகுதியில்

## கடையொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் அமைந்துள்ள கடையொன்றின் மீது வாள்வெட்டுக் குழுவினர் பெற்றோல் குண்டுத் தாக்குதல் ▷23

## சஹ்ரானின் தங்கையிடம் நீதிமன்றில் இரகசிய விசாரணை

(கல்முனை)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மூளையாக செயற்பட்ட சஹ்ரானின் தங்கை உள்ளிட்ட உறவினர்கள் மூவர் விசாரணைக்காக கல்முனை நீதவான் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர்.

நேற்று புதன்கிழமை நீதிமன்ற நீதவான் ஐ.என். றிஸ்வான் முன்னிலை ▷23

### றிஷாத் மனைவியின்

## வங்கிக் கணக்கில் 55 மில்லியன் ரூபாய்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிஷாத் பதியூதீனின் மனைவியின் பெயரில் உள்ள தனியார் வங்கி கணக்குகளில் ▷23

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
- ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
- பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
- அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை



20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
(C-6835)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தையிட்டி மக்கள் புனர்வாழ்வு ஒன்றியத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

இடம் : தையிட்டி தெற்கு பொது நோக்கு மண்டபம்

காலம் : 07.07.2019 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : முற்பகல் 10.00 மணி

அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(9438) – செயலாளர்

## மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவேன் – கோத்தா

(கொழும்பு)

வெகு விரைவில் நாட்டுக்கு திரும்பி, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவுள்ளதாக, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் சுகநலன் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக நேற்று புதன் கிழமை அங்கு சென்ற கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்கவிடம் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் இதனை தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி யூலிஆன் தயாகரன்
அவர்களின் மாமியார்
திருமதி
**மாணிக்கம்**
அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்ததையிட்டு அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.
(9456)

## மணிவிழா வாழ்த்து

04.07.2019



**MR.SARAVANAMUTHTHU KANAGARATNAM**
**Principal Grade - 2 Spe Trd. Social & History, DSM**
**JP(whole Island) Mu / Valayanmadam G.T.M. School**

| சேவையாற்றிய பாடசாலை | வகை | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|---|
| மு/பாரதி வித்தியாலயம் வள்ளுவர்புரம் | 1 c | ஆசிரியர் | 1990.03.15 - 1995.01.08 |
| மு/இரணைப்பாலை ம.வி | 1 c | ஆசிரியர் | 1995.01.09 - 2006.09.05 |
| மு/ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை | Type II | அதிபர் | 2006.09.06 - 2016.01.19 |
| மு/வலையன்மடம் அ.த.க.பாடசாலை | Type III | அதிபர் | 2016.01.20 - 2019.07.03 |

**ஓய்வுக்காலம் மகிழ்வாகவும் ஆரோக்கியமாகவும் அமைய வாழ்த்துவோர் :**
**அதிபர், ஆசிரிய நண்பர்கள் - முல்லைத்தீவு கல்வி வலயம்.**
(C-6850)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி விமலாதேவி விக்னேஸ்வரனின்
அன்புத் தந்தையார்
அமரர்
**கோவிந்தர் கந்தர்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

(9457)
பாடசாலை சமூகம்,
யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

ஓம் சக்தி



## கருணைமிக்க புவனேஸ்வரியை தொழுதேன்...

பாகத்திற் பரமன்வைத்தார் பார்வதி தேவியுன்னைப்
பாவலர் பாட்டில்வைத்தார் நாவலர் சொல்லில்வைத்தார்
ஆகத்துள் உன்னைவைத்த அன்பரோ கோடி கோடி
அகிலாண்ட ஈஸ்வரியே அன்னை முத்து மாரி நீயே
ஏகமாய்ப் பலவாயெங்கும் நிறைந்திட்ட சக்தியானாய்
எழிலுடன் கருணைமிக்க தெய்வமும் நீயேயானாய்
ஆகம விதிகள்கண்ட அரியாலை வெட்டுக்குளத்தில்
அமர்ந்திட்ட புவனேஸ்வரியே அடியினைத்தொழுதேன்யானே!

**ஆக்கம் : சின்னையா சிவபாலன் - கோண்டாவில்**

(அரியாலை வெட்டுக்குளம் திருவருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் திருக்கோயிலின் இவ் வருடப் பெருந்திருவிழாவில்; 04.07.2019 ஆகிய இன்று கொடியேற்ற நாளாகும். அதை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.) (9460)



## யாழ் / கச்சாய் இந்துப் போட் இராசரத்தினம் மகாவித்தியாலயமாக மலரட்டும்



ஆறுமுகநாவலர் பெருமான் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிய பணியை பின் தொடர்ந்து இலங்கையில் 187 இந்துப் பாடசாலைகளை நிறுவிய பெருமகன் "இந்து போட் இராசரத்தினம்" அவர்களின் 135 ஆவது ஜெயந்திதினம் இன்று கொண்டாடப்படுகிறது. 1942ஆம் ஆண்டு கச்சாய் கிராமத்தில் வசித்த இந்துசமய மக்கள் இந்துப்பாடசாலை ஒன்றினை நிறுவித்தருமாறு திரு.சு.இராசரத்தினத்தை வேண்டிக்கொண்டதன் பிரகாரம் இராசரத்தினம் அவர்களின் பெறாமகன் கச்சாய்க் கிராமத்தை பூர்வீகமாகக்கொண்ட செல்வம் பரநிருபசிங்கம் என்பவர் தனது மைத்துனர் பரராசசேகரத்துடன் தொடர்பு கொண்டு பரராசசேகரத்தினால் பாடசாலைக்கு ஆதனம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இவ்வாதனத்தில் திரு. இராசரத்தினம் அவர்களால் செங்கற்களினால் கட்டடம் உருவாக்கப்பட்டு ஆசிரியசேவைக்கு திரு.க.கணபதிப்பிள்ளை, திரு.க.இராசதுரை, செல்வி புண்ணியர் மனோன்மணி போன்றோர் அமர்த்தப்பட்டனர். இதனால் அருகிலுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலை செயலிழக்கத்தொடங்கியது. 1947ஆம் ஆண்டு இப்பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதும் இந்துப்பாடசாலை துரிதகர வளர்ச்சியடைந்தது. இதிலிருந்து 1958ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி சித்தியடைந்தார்கள். பாடசாலை சமூகத்தினால் தொடர்ந்து 25 வருட கால முயற்சியினால் 2018ஆம் ஆண்டு அன்றைய வட மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் அவர்களின் முயற்சியினாலும், பாடசாலை மகாவித்தியாலயம் அந்தஸ்த்தினை அடைந்தது.

இதனைத் தொடர்ந்து 10.09.2018 அன்று ஸ்தாபகர் திரு.சு.இராசரத்தினம் அவர்களின் திருவுருவச்சிலை அடிக்கல் நாட்டு வைபவமும், 10.10.2018 அன்று ஸ்தாபகரின் திரு உருவச்சிலை திறப்பு வைபவத்தை அன்றைய வடமாகாண கல்வி அமைச்சர்கலாநிதி சர்வேஸ்வரன் அவர்கள் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்தார்.


இந்து சமயக் கிரியைகள் கடைப்பிடிக்கப்பட்டு நடைபெற்ற இவ் வைபவத்தில் கலந்து கொண்ட ஸ்தாபகர் மகள் திருமதி திலகவதி மாணிக்கவாசகர். இந்து போட் பெரியார்கள், வலயப்பணிப்பாளர்கள் உட்பட இவ் வைபவத்தில் ஆசியுரை வழங்கியோர் 187 பாடசாலைகளிலும் முதல்முதலாக ஸ்தாபகரின் திரு உருவச்சிலை நிறுவிய வரலாற்றுப்பெருமை இப்பாடசாலைக்கே உரியதென்றும் இப் பாடசாலையை "இந்து போட் இராசரத்தினம் மகாவித்தியாலயம் எனும் பெயரை சூட்டவேண்டும் என வேண்டிக் கொண்டார்கள். இதன் பிரகாரம் அவ்விடயம் எழுத்தினால் வடிக்கப்பட்டு சபையோர் ஒப்புதலுடன் பழைய மாணவன் இரா.சோதிநாதனால் பலத்த கரகோஷத்தின் மத்தியில் அந்த அறிக்கையை அதிபர் திரு.கா.குணசிங்கத்திடம் கையளிக்கப்பட்டது. தற்போது A/L கலைப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை உன்னத நிலையினை அடைந்து கொண்டிருக்கிறது.

(C-6852)

# தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடியவரே பிரபாகரன்

## அவரின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி விட்டார் ஜனாதிபதி

## பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா காட்டம்



**(கொழும்பு)**

**தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடிய தலைவர் பிரபாகரனை கொச்சைப்படுத்தி விட்டார் ஜனாதிபதி மைத்திரி என முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா காட்டமாக தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகள் இயக்கம் போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலமாகவே பொருளாதார பலத்தைப் பெற்றார்கள் என ஜனாதிபதி நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த கருத்திற்கு பதிலளிக்கும் முகமாகவே ஊடகமொன்றுக்கு பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்துள்ள அவர், "தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதிவரை கொள்கைக்காக போராடி மரணித்தார்கள்.

அப்படிப்பட்ட விடுதலைப் புலிகளை போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபடுத்தி கேவலப்படுத்த முனைவது முட்டாள்தனமான செயல்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் மது போதையை விரும்பாதவர். அதற்கு எதிரானவர். போர் காலத்தில் இது நமக்கு நன்கு தெரியும்.

அவர்களின் ஆயுத போராட்டத்திற்கு இந்தியா, கனடா, சுவிஸ், லண்டன், அமெரிக்கா, பிரான்ஸ் என சர்வதேச நாடுகளில் வாழும் தமிழர்கள் நிதியுதவிகளை வழங்கினார்கள்.

அந்த நிதிகளின் மூலமே போராட்டத்தை பிரபாகரன் முன்னெடுத்தார். அந்த நிதிகளின் மூலமே நவீன ரக ஆயுதங்களை கூட வெளிநாடுகளில் இருந்து புலிகள் கொள்வனவு செய்தனர்.

இன்றும் கூட புலம்பெயர் அமைப்புக்கள் புலிகளின் நினைவு தினங்களை பெருந்தொகை பணம் செலவிட்டு பெருவிழாவாக நடத்தி வருகின்றனர்.

புலிகளின் காலத்தில் வடக்கில் போதைப்பொருள் விற்பனை கொடிகட்டி பறக்கவில்லை. போர் நிறைவுக்கு வந்த பின்னரே வடக்கில் போதைப்பொருள் பாவனையும் விற்பனையும் தலைவிரித்தாடுகிறது. இதனை ஜனாதிபதி கவனத்திற்கொள்ள வேண்டும்" என மேலும் தெரிவித்துள்ளார்.(7)

---

## "சோபா" ஒப்பந்தத்தால் நாட்டுக்கு நன்மையில்லை

### அட்மிரல் சரத் வீரசேகர

படைகளின் அந்தஸ்து ஒப்பந்தத்தின் (சோபா) மூலமாக அமெரிக்க படைகளுக்கு எமது நாட்டுக்குள் கட்டற்ற சுதந்திரமும், எமது வளங்களைப் அபகரிக்கும் அங்கீகாரமும் வழங்கப்படுமே தவிர, அதனால் நாட்டுக்கு எந்தவொரு அனுகூலமும் இல்லை என்று இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்துடன் இலங்கை செய்துகொள்ள உத்தேசித்திருக்கும் சோபா ஒப் பந்தத்தின் உள்ளடக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அடங்கியுள்ள விடயங்கள் நாட்டின் இறையாண்மையையும், சுயாதீனத்துவத்தையும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகப் பலராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இத்தகைய கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்ததுடன், இலங்கையுடன் அமெரிக்க மேற்கொள்ளும் ஒப்பந்தங்கள் இலங்கையின் இறையாண்மைக்கு மதிப்பளிக்க முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை அமெரிக்காவுடன் செய்துகொள்வதற்கு எதிர்பார்த்திருக்கும் ஒப்பந்தங்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டுவரும் நிலையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சோபா உடன்படிக்கைக்கு அடுத்ததாக அமெரிக்காவுடன் கைச்சாத்திடத் திட்டமிட்டிருக்கும் எக்ஸா மற்றும் மிலேனியம் சவால் ஒத்துழைப்பு ஆகிய ஒப்பந்தங்களும் நாட்டிற்கு பாதிப்பையே ஏற்படுத்தும் என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார். (7-9)

---

## ஜனாதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல்

### தேசிய பாதுகாப்பின் பலவீனம் வெளிப்பட்டுள்ளது

### மகிந்தானந்த எம்.பி. தெரிவிப்பு

தனக்கு உயிரச்சுறுத்தல் உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளமை தேசிய பாதுகாப்பு எந்த அளவிற்கு பலவீனமாக உள்ளது என்பதை தெளிவுபடுத்துகின்றது.

புலனாய்வுப் பிரிவின் ஊடாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல்களை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத் கமகே தெரிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை தொடர்ந்து தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், இத்தகவல்களை புல னாய்வு பிரிவினரிடமிருந்து கிடைக்கப் பெற்றதாகவும், ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

நாட்டு தலைவர், முப்படைகளின் பிரதானியாக உள்ள ஜனாதிபதிக்கு பாதுகாப்பு இல்லாவிடின் நாட்டு மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்படும். ஜனாதிபதியின் கருத்தினை தொடர்ந்து தேசிய பாதுகாப்பின் பலவீனம் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

---

## உத்தரவு கிடைத்ததும் தூக்கிலிடத் தயார்

### சிறைச்சாலை திணைக்களம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தரவு கிடைத்ததும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு அவசியமான அனைத்து ஏற்பாடுகளையும் சிறைச்சாலைகள் திணைக்களம் தயார் நிலையில் வைத்திருப்பதாக அதன் நிர்வாக ஆணையாளர் பந்துல ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நான்கு மரண தண்டனைக் கைதிகளின் பெயர்களும் அவர்களை தூக்கிலிடுவதற்கான நாட்களும் நியமிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளபோதும் அது தொடர்பான எவ்வித தகவல்களும் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கோ ஆணையாளர் நாயகத்துக்கோ கிடைக்கவில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இரண்டு அலுகோசுகள் நிரந்தரமாக சிறைச்சாலைகள் திணைக்களத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டிய நாட்கள் பற்றிய விபரம் எமக்கு கிடைத்ததும் அதற்கு முந்தைய நாளன்று தூக்குக் கயிற்றின் வலிமை மற்றும் அதன் தற்போதைய நிலைகுறித்து ஆராய்வதற்காகத் தூக்குக் கயிற்றில் மணல் மூடையைக் கட்டித் தொங்கவிட்டு பரிசோதிப்பது வழக்கம். அந்த வகையில் பரிசோதிப்பதற்காக மணல் மூடைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனைக் கைதிகளின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலை சிறைச்சாலைகள் திணைக்களம் ஜனாதிபதியிடம் ஏற்கனவே கையளித்துள்ளது. அவர்களுள் முதலில் தூக்கிலிடுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட நால்வரின் பெயர்களைத் தெரிவு செய்து அதற்கான நாள் குறிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளபோதும் அதுபற்றிய எவ்வித தகவல்களும் சிறைச் சாலைகள் திணைக்களத்துக்குக் கிடைக்காததால் அந்நால்வரும் யாரென்பது பற்றி இதுவரை தங்களுக்குத் தெரியாதென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.(7-9)

---

## மரண தண்டனை கைதிகள் 20 பேரின் விபரங்களை வெளியிடுங்கள்

### தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு சில மாதங்களுக்கு முன்னர் போதைப் பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மரணதண்டனைக் கைதிகள் 20 பேரின் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அவர்கள் குற்றவாளியாக இனங்காணப்பட்ட திகதி மற்றும் வழக்கு இலக்கம் என்பவற்றை வழங்குமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டிருக்கிறது.

உடனடி ஆபத்தை எதிர் நோக்கியிருக்கும் இந்நாட்டுப் பிரஜைகளைக் கருத்திற்கொண்டு விரைவான பதிலை எதிர்பார்த்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினாலும், ஊடகவியலாளர் மலிந்த செனவிரத்னவினாலும் தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட தகவல் கோரல் விண்ணப்பத்தை அடுத்தே ஆணைக் குழுவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

எனினும் சில கைதிகள் தமது விபரங்கள் வெளியிடப்படுவதை விரும்ப மாட்டார்கள் என்பதால், அவர்களிடம் அனுமதி பெற்ற பின்னரே அவற்றை வெளியிட முடியும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்திருக்கிறது. (7-9)




# அரையிறுதியில் இங்கிலாந்து

## நியூசிலாந்துக்கும் வாய்ப்பு




அதிரடியாக ஆடி சதம் அடித்த இங்கிலாந்தின் ஜொனி பேர்ஸ்டோவ்

நியூசிலாந்துக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் பேர்ஸ்டோவ் சதம் விளாச, இங்கிலாந்து அணி 119 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இங்கிலாந்தில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. செஸ்டர் லீ ஸ்ட்ரீட்டில் நடந்த லீக் போட்டியில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய், பேர்ஸ்டோவ் ஜோடி 'சுப்பர்' ஆரம்பம் கொடுத்தது. இருவரும் அரைசதம் கடந்தனர். ஜேசன் ரோய் (60) அரை சதம் கடந்தார். அபாரமாக செயல்பட்ட பேர்ஸ்டோவ் (106) தொடர்ந்து இரண்டாவது சதம் விளாசினார். இதன்பின், பந்துவீச்சாளர்கள் எழுச்சி பெற்றனர். போல்ட் 'வேகத்தில்' ரூட் (24), பட்லர் (11) திரும்பினர். ஹென்றி 'வேகத்தில்' மோர்கன் (42) ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்கள் எடுத்தது.

**அதிர்ச்சி ஆரம்பம்**

நியூசிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. வோக்ஸ் வீசிய முதல் ஓவரில் நிக்கோல்ஸ் டக் அவுட்டானார். ஆர்ச்சர் பந்தில் கப்டில் (8) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் வில்லியம்சன் (27), ரொஸ் டெய்லர் (28) ரன் அவுட்டாகினர். லைதம் (57) மட்டும் அரை சதம் அடித்து ஆறுதல் கொடுத்தார். மற்றவர்கள் ஏமாற்ற, நியூசிலாந்து அணி 45 ஓவர்களில் 186 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. 119 ஓட்டங்களால் வீழ்ந்தது. புள்ளிப்பட்டியலில் மூன்றாவது இடம் (12 புள்ளி) பிடித்த இங்கிலாந்து அணி 1992க்குப்பின், முதலாவது முறையாக அரையிறுதிக்குள் நுழைந்தது. தவிர, 36 ஆண்டுக்குப்பின் உலக கிண்ண அரங்கில் நியூசிலாந்தை வீழ்த்தியது.

## சிக்கலில் பாகிஸ்தான்

**சிக்கலில் பாக்.,**

உலக கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு அவுஸ்திரேலியா (14), இந்தியா (13), இங்கிலாந்து (12) அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. நியூசிலாந்து 11 புள்ளியுடன் (ரன் ரேட் +0.175) 4வதாக உள்ளது. 5வதாக உள்ள பாகிஸ்தான் (9 புள்ளி, −0.792) நாளை பங்களாதேஷை 316 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றால் மட்டுமே அரையிறுதி குறித்து யோசிக்கலாம். இதனால் நியூசிலாந்தின் அரையிறுதி ஏறக்குறைய உறுதியாகிறது.

**3**

இங்கிலாந்தின் ஜேசன், பேர்ஸ்டோவ் ஜோடி, இத்தொடரில் மூன்றாவது முறையாக முதல் விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களுக்கும் (123 ஓட்டங்கள்) அதிகமாக சேர்த்தது. உலக கிண்ண அரங்கில் இது போல சாதித்த இலக்கை எட்டிய 4வது ஜோடி என்ற பெருமையை வோர்னர், பின்ச் (அவுஸ்.) ஜோடியுடன் பகிர்ந்து கொண்டது. இதற்கு முன், இலங்கையின் அரவிந்த் டி சில்வா, குருசின்ஹா (1996), அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட், ஹைடன் (2007), இலங்கையின் டில்ஷன், சங்கக்கார (2015) ஜோடி இந்த இலக்கை எட்டி இருந்தது.

**37**

நேற்றைய போட்டியில் இரண்டு விக்கெட் வீழ்த்தியதன் மூலம், உலக கிண்ண அரங்கில் நியூசிலாந்துக்காக அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சாதனை படைத்தார் போல்ட். இதுவரை 17 போட்டிகளில் 37 விக்கெட் கைப்பற்றி உள்ளார். இரண்டாவது இடத்தில் ஜேக்கப் ஓரம் (23 போட்டி), வெட்டோரி (32) தலா 36 விக்கெட்டுடன் உள்ளனர்.

**2**

பேர்ஸ்டோவ் நடப்பு தொடரில் இரண்டாவது சதம் எட்டினார். உலக கிண்ண அரங்கில் அதிக சதம் அடித்த இங்கிலாந்து வீரர்கள் பட்டியலில், முதலிடத்தை கெவின் பீட்டர்சன் (2007), ஜோ ரூட் (2019) உடன் பகிர்ந்து கொண்டார்.

**500**

இப்போட்டியில் 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்த ஜோ ரூட், நடப்பு தொடரில் 500 ஓட்டங்களை எட்டினார். இதனையடுத்து, ஒரே உலகக் கிண்ணத் தொடரில் 500 ஓட்டங்களை எட்டிய முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமை பெற்றார்.

## 'ஓ.. பாட்டி நல்ல பாட்டிதான்'

### தளராத கிரிக்கெட் ரசிகை



இந்தியா, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான உலக கிண்ண லீக் போட்டியை 87 வயதிலும் தளராமல் பார்த்து ரசித்தார் பாட்டி சாருலதா படேல்.

இங்கிலாந்தில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. பேர்மிங்காமில் நடந்த லீக் போட்டியில் இந்திய அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தியது. இதில் இந்திய வீரர்கள் ஓட்ட மழை பொழிந்த போது, 'கேலரியில்' இருந்த 87 வயது பாட்டி சாருலதா படேல், மகிழ்ச்சியில் திளைத்தார்.

கன்னங்களில் மூவர்ணக்கொடி வரைந்து, தள்ளாத வயதிலும் 'உவ்சேலா' வைத்து ஊதிய ரசிகர்கள் மனதை கவர்ந்தார். இது 'ரிவி' ஸ்கிரீனில் காண்பிக்கப்பட, ஒரே இரவில் பிரபலம் ஆனார். போட்டி முடிந்த பின், இந்திய அணி அணித் தலைவர் ஹோலி, ரோகித்தை சந்தித்து பேசினார்.

**லோர்ட்சில் நடனம்**

சாருலதா பாட்டி கூறியதாவது, ஆப்ரிக்காவிலிருந்து கடந்த 1975ல் இங்கிலாந்து வந்தேன். 1983ல் கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி லோர்ட்ஸில் நடந்த இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. அப்போட்டியை நேரடியாக கண்டு, உற்சாகத்தில் நடனம் ஆடினேன்.

பங்களாதேஷுக்கு எதிரான போட்டிக்குப் பின், அணித் தலைவர் ஹோலி, ரோகித் சந்தித்து ஆசி பெற்றனர். மீதமுள்ள போட்டிகளை காண வர வேண்டும் என ஹோலி தெரிவித்தார். டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்து தருவதாக உறுதி தந்தார். எனக்கு கடவுள் பக்தி அதிகம். இந்திய அணி கிண் ணம் வெல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன்," என்றார்.

சாருலதா பாட்டிக்கு, மகேந்திரா நிறுவனத்தின் சேர்மன் ஆனந்த், இந்தியா பங்கேற்கவுள்ள . மீதமுள்ள போட்டிக்கான 'டிக்கெட்டை' தருவதாக உறுதி அளித்துள்ளார்.

இது குறித்து ஹோலி 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தியில்,' 87 வயதில் இந்திய அணிக்கு ஆதரவு தரும் சாருலதா பாட்டிக்கு நன்றி. வயது என்பது வெறும் 'நம்பர்' மட்டுமே. ஆர்வம் இருந்தால் போதும், எதையும் ரசிக்கலாம்,' என தெரிவித்துள்ளார்.

**நிக்கோல்ஸ் துரதிருஷ்டம்**

நேற்றை போட்டியின் முதல் ஓவரில் நிக்கோல்சிற்கு எல்.பி.டபிள்யு., முறையில் அம்பயர் சுந்தரம் ரவி (இந்தியா) அவுட் கொடுத்தார். நிக்கோல்ஸ் 'ரிவியு' கேட்கவில்லை. 'ரீப்ளேயில்' பார்த்தபோது, பந்து ஸ்டம்ப்சை தகர்க்கவில்லை (விக்கெட் மிஸ்சிங்)என தெரியவந்தது. நிக்கோல்ஸ் 'ரிவியு' கேட்டிருந்தால் தப்பித்திருக்கலாம்.

## இறுதியில் பிரேசில்




கோல் அடித்த மகிழ்வில் பிரேசிலின் காபிரியேல் நவாஸ்

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் இறுதிக்கு பிரேசில் அணி முன்னேறியது. அரையிறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தியது.

பிரேசிலில், கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் 46வது சீசன் நடக்கிறது. இதன் அரையிறுதியில் பிரேசில், ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய பிரேசில் அணி க்கு கேப்ரியல் ஜீசஸ் (19வது நிமிடம்), பிர்மினோ (71வது) தலா ஒரு கோலடித்து கைகொடுத் தனர். மெஸ்சி இடம்பெற்றிருந்த ஆர்ஜென்ரீனா அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் பிரேசில் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று, 20வது முறையாக இறுதிக்குள் நுழைந்தது. முன்னதாக விளையாடிய 19 இறுதிப் போட்டிகளில், 8 முறை வெற்றி பெற்று கிண்ணம் வென்ற பிரேசில் அணி, 11 முறை தோல்வியடைந்து 2வது இடம் பிடித்தது.

# தூக்குத் தண்டனை நிறுத்தப்பட வேண்டும்

## யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

போதைப்பொருளை முற்றாக தடை செய்து போதைப்பொருள் இல்லாத ஒரு நாட்டை உருவாக்க ஒரே வழி போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் போதைப் பொருளைத் தம்வசம் வைத்திருப்போர் ஆகியோருக்கு மரண தண்டனை நிறை வேற்றுவது என்ற எமது ஜனாதிபதியின் திட்டத்தை நாம் முற்றாக எதிர்க்கிறோம்.

இம் மரணதண்டனையை எதிர்ப்போர் போதைப்பொருள் வர்த்தகத்திற்கும் நுகர் வுக்கும் ஆதரவானவர்கள் என்ற ஜனாதி பதியின் கூற்றையும் நாம் கண்டிக்கின்றோம்.

உலகில் அநேகமான நாடுகளில் மரண தண்டனை இல்லாதொழிக்கப்பட்டு விட்டது. இலங்கையிலும் 1976ஆம் ஆண்டுக்குப் பின் மரணதண்டனை யெது வும் நிறைவேற்றப்படவில்லை. இந்தப் பின்னணியில் சில மாதங்களுக்கு முன் கத்தோலிக்க திரு அவையில் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் எந்த ஒரு மனி தனுக்கும் சக மனிதனுக்கும் மரண தண் டனை நிறைவேற்ற எச்சந்தர்ப்பத்திலும் உரிமை கிடையாது என்று தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

இன்னும் சில நாட்களில் போதைவ ஸ்து தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டவ ர்களுள் ஒரு தொகுதியினருக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதற்கான ஆணை யில் எமது ஜனாதிபதி பல நாடுகளதும் மனித உரிமை அமைப்புக்களதும் சமயத் தலைவர்களதும் கடுமையான எதிர்ப்புக் களின் மத்தியிலும் கையெழுத்திட்டமை எமக்கு பேரதிர்ச்சியை தந்துள்ளது.

மரண தண்டனையை நிறைவேற்றுவ தற்கு விடுத்து போதைப்பொருள் வர்த்த கத்தையும் பாவனையையும் வினைத்தி றனுடன் நிறுத்துவதற்கு மதத்தலைவர்கள் புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், பாட சாலை அதிபர்கள், பாதுகாப்புத்துறையினர் ஆகியோரின் உதவியுடன் பரந்த அளவில் ஒரு வேலைத்திட்டத்தை ஏற்படுத்துவதில் முழுக்கவனத்தைச் செலுத்துமாறு நாட்டின் பெயரைக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டிய ஜனாதிபதி ஈடுபட வேண்டு மென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(9)

# மின்னிணைப்பு மானி வழங்கும் வேலைத்திட்டத்துக்கு காசோலை வழங்கிவைப்பு



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் மற்றும் தேவன் பிட்டி ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 59 குடும்பங்களுக்கு மின் இணைப்பு மானி பொருத்தும் வேலைத்திட் டத்திற்காக நேற்று முன்தினம் காசோலை கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீ னின் பாதீட்டு நிதி ஒதுக் கீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 59 குடும்பங்களுக்கு 4 இலட் சத்து 65 ஆயிரம் ரூபாய் நிதியில் குறித்த மின் இணைப்பு மானி கள் பொருத்தும் நட வடிக்கைகள் மேற் கொள ளப் பட் டுள் ளன.

இதன்போது முன் னாள் வட மாகாண சபை உறுப்பினர் றிப் கான் பதியுதீன், மன்னார் பிர தேச சபை முதல்வர் எம்.முஜா ஹிர், மீள் குடியேற்ற செயல ணியின் மன்னார் மாவட்ட திட்ட இணை ப்பாளர் முஜிபுர் ரஹ் மான், மாந்தை மேற்கு பிரதேச சபை முதல்வர் சந்தி யோகு, இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப் பாளர் என். எம். முனவ்பர், மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர் நந்தன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த காசோலை களை வழங்கி வைத் தனர். (9-285)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### சிங்காரம் நாகரத்தினம் (அஜித்)



கடந்த 02.06.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிங்காரம் நாகரத்தினம் (அஜித்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 06.07.2019 சனிக்கிழமை அன்று அன்னாரது இல்லமான திம்பிலி வீதி, புதுக்குடியிருப்பு என்னும் முகவரியில் இடம்பெறவுள்ளது. எனவே அன்றையதினம் அந்தியேட்டிக் கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

எமது தலைவனின் துயரச் செய்தி கேட்டு எம்மை ஆற்றுப்படுத்தியவர்கள், மரணச் சடங்கில் கலந்து கொண்டு எமது ஆறாத்துயரில் பங்கெடுத்துக் கொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(C-6851)

திம்பிலி வீதி,
புதுக்குடியிருப்பு. 077 282 7690

தகவல்:
குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



மண்ணில்
27 . 10 . 1950

விண்ணில்
15 . 07 . 2018

### அமரர் பொன்னர் தங்கவடிவேல்

கடந்த 15.07.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னர் தங்கவடிவேல் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று 04.07.2019 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் மதியம் 12.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-6845)

மஹாத்மா வீதி,
அல்வாய் வடக்கு, அல்வாய்

குடும்பத்தினர்


## இராசி பலன்

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர் வீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், புதிய சொத் துக்களை வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மற்றவர் கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** நீண்ட நாளைய பிணக்குக ளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, குடும்பத் தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் பொருளாதார விருத்தியுண்டு, சுப செய்தி கள் வந்து சேரலாம், பொன் னான நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** தேகநலனில் முன்னேற்றம் காண்பீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர் கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | ஆரி, புத, ராகு, சுக் |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம் | | செவ், சந் |
| சனி, கேது | | குரு | |

04.07.2019
ஆனி 19, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துதியை முன்னிரவு 9.34 மணிவரை
புனர்பூசம் காலை 6.46 மணிவரை
பூசம் பின்னிரவு 5.22 மணிவரை
சுபநேரம் 7.27-8.57 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை
சுவாமி விவேகானந்தர் நினைவு தினம்
அமிர்தசித்தம்

வளவன்

**கடகம்:** பெரியமனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சாமர்த்திய மாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், பய ணங்களால் பலனுண்டு, முன் னேற்றம் பெற பெரிதும் பாடு படுவீர்கள்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், உறவினர்க ளும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன நன்மையுண்டு.

**சிம்மம்:** திடீரெனக் கேட்கும் செய்தி களால் திகைப்படையலாம், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:** பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கலில் கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், தேவைய ற்ற மனஸ்தாபம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ரோக பய முண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத் துழைப்பு கிடைக்கும், எதிர் பாராத தனவரவுகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், செய்தொழில் மேன் மையுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடு த்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



தேசிய போதைப்பெருள் வாரத்தை முன்னிட்டு "போதையற்ற பாதை" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு நடை பவனி ஒன்று இடம்பெற்றது. பருத்தித்துறை பிரதேச செயலகம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையினர் இணைந்து இவ் விழிப்புணர்வு நடை பவனியினை மேற்கொண்டனர். (படங்கள்-கரணவாய்ச் செய்தியாளர்)

# பாடசாலைகளில் அதிகரிக்கும் நிதி அறவீடு, கட்டுப்பாடு விதிக்க ஆளுநர் தீர்மானம்

வட மாகாண பாடசாலைகளில் அபிவிருத்தி நிதி அறவீடு தொடர்பில் வட மாகாண ஆளுநர் கட்டுப்பாடுகளை விதிக்கத் தீர்மானித்துள்ளதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதிக்கெனக் காரணம் காட்டி மாணவர்களிடமிருந்து அதிக நிதி அறவிடப்படுவதாக வட மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஆனால்,பாடசாலைச் சுற்று நிருபத்தின் படி 50 ரூபாவில் இருந்து 600 ரூபாய் வரையான நிதி அறவீடுகள் மாத்திரம் பாடசாலை அதிபர்களினால் அறவீடு செய்ய முடியும்.

குறித்த தொகைக்கு அதிகமான நிதி அறவீடுகள் மாணவர்களிடம் இருந்து அறவிடப்படுமானால் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் குறித்த நிதி அறவிடப்படுவதற்கான ஏற்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

இவ் விடயம் தொடர்பில் சுற்று நிருபம் ஒன்றை தயாரிப்பதற்காக ஏற்பாடுகளை ஆளுநர் செயலகம் விரைவில் ஆரம்பிக்குமென ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.(5-10)

# இனந்தெரியாதோரால் மின்கம்பங்கள் சேதம்



தென்மராட்சி-மறவன்புலோ பகுதியில் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான ஏழு மின் கம்பங்களை கடந்த திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதோர் இடித்து விழுத்தி சேதமாக்கியிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மறவன்புலோ பகுதியில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தினரால் சேமிக்கப்படும் மின்சாரத்தைக் கடத்துவதற்காக நாட்டப்பட்ட பாரிய மின் கம்பங்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மைக் காலமாக மறவன்புலோ பகுதியில் காற்றாலை அமைப்பதற்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. பெக்கோ (ஜே.சி.பி) வாகனங்களின் உதவியுடன் மின்கம்பங்கள் இடித்து சேதமாக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-30)

# அறுகுவெளிப் பகுதியில் உப்பளம் அமைக்க அனுமதி இன்னும் இல்லை

தென்மராட்சி-அறுகுவெளிப் பகுதியில் அரச காணியில் பயனாளிகளை உள்ளீர்த்து அமைக்கப்படவுள்ள உப்பளத்திற்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழு அனுமதியை எதிர்பார்த்திருப்பதால் எல்லாமே கைமீறிப் போகும் நிலை காணப்படுவதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறுகுவெளிப் பகுதியில் பயனாளிகளை உள்ளீர்த்து உப்பளம் அமைப்பதற்காக 1500 ஏக்கர் அரச காணி பிரதேச சபையால் இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உப்பளம் அமைப்பதற்கான அனுமதி கோரி இருப்பினும் அதற்கான அனுமதி குறித்த கூட்டத்தில் வழங்கப்படாமல் அடுத்த கூட்டம் வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள எமது வளங்களைச் சுரண்ட தென்னிலங்கையில் உள்ள பலர் ஆர்வம் கொண்டுள்ளனர்.

ஆகவே எமது திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த திட்டத்திற்கான அனுமதியை ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிய போது குறித்த திட்டம் நடைமுறைக்கு சாத்தியமானதா?,நிதி நிலைமை அடிப்படையில் சாத்தியமானதா? எனச் சிந்திக்க வேண்டும் எனவும் அத்துடன் சுற்றுச்சூழல் அதிகாரசபையிடம் இதற்கான அனுமதியை பெற வேண்டும் எனவும் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரனால் ஆலோசனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# உணவு கையாளும் நிலையத்துக்கு எதிராக 1 இலட்சத்து 65 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

உணவு கையாளும் நிலையம் ஒன்றிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய் க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

சுகாதார குறைபாடுகளுடன் பருத்தித்துறைப் பகுதியில் இயங்கி வந்த உணவு கையாளும்நிலையத்துக்கெதிராக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் . பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதற்கிணங்க ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதோடு பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பூரணமான திருத்த வேலைகள் செய்து முடிக்கப்படும்வரை கடையை சீல் செய்யுமாறு மன்றினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(5-60)




# சொற்பொழிவு

மாணிக்கவாசகர் குரு பூஜையை முன்னிட்டு தென்மராட்சி மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் நாளை 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச்சொற்பொழிவை சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் பொன் சந்திரவேல் "மாணிக்கவாசகரும் திருவாசகமும்" என்னும் தலைப்பில் வழங்குவார். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (5)





போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தினர் மற்றும் மாணவர்கள், சுகாதாரப் பகுதியினர் இணைந்து போதையொழிப்பு விழிப்புணர்வுப் பேரணியை நடத்தினர்.
(படங்கள்:-மகாலிங்கம்)



கவிஞர் முருகு (ச.முருகையா) வின் கிழக்கும் மேற்கும் - ஒப்பீட்டு கவிதை நூல் அறிமுக விழா யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் கொழும்புத்துறை இலந்தைக்குளம் விநாயகர் ஆலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் சிரேஷ்ட பத்திரிகையாளர்-எழுத்தாளர் எஸ்.பெருமாள், எழுத்தாளர் உளவளத் துணையாளர்- கலாபூஷணம் செ.யோசப்பாலா, யாழ்.பல்கலைக்கழக மானிடவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் சிறீகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொதுமக்கள் பொலிஸாருடன் இணைந்து குற்றச் செயல்களை குறைக்க முன்வர வேண்டும்

## பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சிவில் பாதுகாப்பு கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் நடைபெற்றது. இதில் பொலிஸ் அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், நகரப் பகுதியில் குப்பைகள், பொலித்தீன் பைகள் அங்குமிங்குமாக காணப்படுகின்றன. உடனடியாக சிரமதானம் மூலமாக அகற்ற வேண்டியுள்ளதால் பொதுமக்களின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் பாடசாலைக்கு பிள்ளைகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும் போது தலைக்கவசம் போடாமல் கொண்டு செல்லுகின்றார்கள். இதனால் விபத்துக்கள் ஏற்படும் போது பிள்ளைகள் பாதிப்பிற்கு உள்ளாகின்றார்கள் என்றும் இன்னும் ஒரு சில மாதங்களில் திருவிழாக்கள் கோயில்களில் ஆரம்பமாக இருப்பதனால் இதற்குரிய நடைமுறைகளை பொலிஸ் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்பொழுது நெல்லியடி நகரப் பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கையில் இருப்பதனால் வீதி விபத்துக்கள் குறைவடைந்த நிலையில் இருப்பதாகவும் கூறினார். நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு வரும் முறைப்பாடுகள் காணி எல்லைப் பிரச்சினையும் பணக் கொடுக்கல்-வாங்கல்களும் அதிகமாகப் பதிவாகின்றன. சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் தங்களின் கிராமத்தில் நடைபெறும் சிறு பிரச்சினைகளை பிரச்சினைக்குரியவருடன் அணுகி சமாதானமாக தீர்த்து வைக்கக்கூடிய வல்லமை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நெல்லியடி பொலிஸார் பொது மக்களின் பாதுகாப்பிற்கு நேர காலம் பார்க்காமல் கடமையாற்றிக் கொண்டுள்ளார்கள். எனவே பொதுமக்களும் பொலிஸாருடன் சேர்ந்து குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (5-60)

# வீடு புகுந்து திருடியதாக இரு இளைஞர்கள் கைது

(நெளுக்குளம்)

வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் வீடு புகுந்து நகை மற்றும் பணம் திருடிய சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களை ஈச்சங்குளம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் வீட்டிலுள்ளவர்கள் வெளியே சென்றுள்ளனர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 18பவுண் நகையும் 33ஆயிரம் ரூபா பணத்தையும் திருடி சென்றுவிட்டதாக உரிமையாளரினால் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கிளிநொச்சி மற்றும் ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களையும் சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (9-299)


பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)


றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருவாளர். சரவணமுத்து கனகரத்தினம் (JP)
SLPS-2, DSM, SP.Trd

Congratulations

சேவையாற்றிய பாடசாலைகள்

மு/பாரதி வித்தியாலயம் : 1990.03.15-1995.01.08
மு/இரணைப்பாலை மகா வித்தியாலயம்: 1995.01.09-2006.09.05
மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை (அதிபர்) : 2006.09.06-2016.01.19
மு/வலையன்மடம் அ.த.க. பாடசாலை (அதிபர்) : 2016.01.20-2019.07.04

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து இன்று ஓய்வுபெறும் எமது அதிபர் திரு.ச.கனகரத்தினம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
மு/வலையன் மடம் அ.த.க. பாடசாலை,
முள்ளிவாய்க்கால்.

(C-6853)

## மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



சேவையாற்றிய பாடசாலைகள்
மு/பாரதி வித்தியாலயம்
1990.03.15-1995.01.08
மு/இரணைப்பாலை மகா வித்தியாலயம்
1995.01.09-2006.09.05
மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை (அதிபர்)
2006.09.06-2016.01.19
மு/வலையன்மடம் அ.த.க.பாடசாலை (அதிபர்)
2016.01.20-2019.07.04

திருவாளர்.
சரவணமுத்து கனகரத்தினம் (JP)
SLPS-2, DSM, SP.Trd

அகில இலங்கைச் சமாதான நீதவானும் சமூக சேவையாளரும் மனித நேயச் செயற்பாட்டாளரும் எமது கல்லூரியின் ஆலோசகருமான திருவாளர் அதிபர் ச.கனகரத்தினம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
இயக்குநர் ஜெயம்ஜெகன்
இணைப்பாளர்.
திருமதி ஆசிரியை கிறிஸ்துகமலா பவுனிஸ்,
இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரி,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.


(C-6853)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 51 ½ செவ் 2 இல்<br>உயரம்: 5'6''<br>தகைமை/தொழில்: O/L, Gemany<br>எதிர்பார்ப்பு:உள்நாடு<br>தொ.இ: B/9874 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 25 செவ் 2 இல்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்:B.Scபட்டதாரிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: •Engineer, Lecturer,B.Sc பட்டதாரி,ஆசிரியர்(உள்நாடு)<br>தொ.இ: G/9897 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண் (உள்நாடு)<br>தொ.இ: B/9875 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 74 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L,தாதியஉத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் (உள்நாடு)<br>தொ.இ: G/9898 |
| பிறப்பு: 1985 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'10''<br>தகைமை/தொழில்:A/L, NDE அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண் (உள்நாடு)<br>தொ.இ: B/9876 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 37 ¾ செவ் 12 இல்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்:B.Sc,Software Engineer Uk<br>எதிர்பார்ப்பு: Uk PR<br>தொ.இ: G/5497 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 55 ½ செவ் 1 இல்<br>உயரம்: 5'6''<br>தகைமை/தொழில்:O/L ,அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: O/L,தொழில் புரிபவர் (உள்நாடு)<br>தொ.இ: B/9877 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 60 செவ் 8 இல்<br>உயரம்: 5'5''<br>தகைமை/தொழில்: HNDA,கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/5498 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# இலங்கையில் ஏனைய நாடுகள் கால்பதிக்க ஆளுமையில்லாத் தலைவர்களே காரணம்

## சிறிநேசன் குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**இலங்கையில் ஏனைய நாடுகள் தமது சுயதேவைகளுக்காக கால்பதிக்க ஆளுமையில்லாத் தலைவர்களே காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு - கல்லடியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "எமது பிரச்சினையை நாங்கள் தீர்க்காவிட்டால் ஏனைய நாட்டவர்கள் அதில் அக்கறை கொள்வார்கள்.

எங்களது இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருந்தால் எமது விடயத்தில் இந்தியா, நோர்வே பல் வேறு நாடுகளும் தமது சுயதேவைகளுக்காக எமது நாட்டில் கால்பதிக்கும் நிலையேற்பட்டிருக்காது. நாங்கள் ஆளுமையுள்ள தலைவர்களாக இல்லாத போது யாரோ ஒருவர் எங்களுக்கு எஜமானர்களாக மாறுவார்கள்" என மேலும் தெரிவித்தார். (7)

## மணல் ஏற்றிவந்த இருவர் கைது

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த இருவர் நேற்று முன்தினம் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் ஏற்றி வந்த இரண்டு டிப்பர்களை புளியம்பொக்கணை வீதியில் நேற்று முன்தினம் காலை பொலிஸார் மறித்து சோதனை மேற்கொண்டுள்ளனர்.

அப்போது அவர்கள் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றி வந்தது தெரியவந்துள்ளது. உடனடியாக இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கெதிரான சட்டநடவடிக்கையை மேற்கெண்டுள்ளனர். (9-316)

# நவீனமுறை மீன்பிடித் தொழிலுக்கு அனுமதி மறுக்கப்படுவதாக தெரிவித்து

## இரணைப்பாலை மீனவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் மற்றைய அரசியல்வாதிகளும் எங்களை மனித உணர்வோடு பார்ப்பதில்லை என இரணைப்பாலை கடற்றொழில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இரணைப்பாலை, மாத்தளன் போன்ற பிரதேசங்களில் நவீன முறையிலான மீன்பிடித்தொழிலுக்கு நீரியல்வள திணைக்களம் அனுமதி மறுத்துள்ளதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அப்பகுதி மீனவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் நேற்று முறைப்பாடொன்றினை பதிவு செய்துள்ளார்கள்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாங்கள் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு சொத்துக்கள், உடைமைகள் அனைத்தும் இழந்து மீண்டும் எமது ஊருக்குச் சென்று மீள்குடியேற்றப்பட்டு மீன்பிடித் தொழில் செய்து வந்தோம்.

யுத்தத்துக்கு முன் நாங்கள் பழைமையான முறையில் தான் கடல் தொழிலைச் செய்து வந்தோம். நவீன முறையிலான தொழில் எங்கள் பிரதேசத்துக்கு வரவில்லை. நாங்கள் 15 குதிரைவலு சக்தியுடைய இயந்திரத்தையே இயக்குவதற்கு முடியாத நிலையில் இருந்தோம்.

அதன் பிற்பாடு நாங்கள் பழைமையான தொழில் முறையினைப் பயன்படுத்தி தொழிலைச் செய்தால் எமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதநிலை காணப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் தென்னிலங்கை மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய கடல் பகுதிகளில் நவீனமயப்படுத்தப்பட்ட தொழில் முறையில் நிறைவான இலாபத்தைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 2016 ஆம் ஆண்டு நாங்கள் நீரியல் வளத்திணைக்களத்திடம் சென்று நாங்களும் எமது மாவட்டத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட முறையில் தொழிலைச் மேற்கொள்ள வேண்டுமென்று கோரியிருந்தோம். இந் நிலையில் தொழிலைச் செய்வதாக இருந்தால் அதற்குத் தேவையான இயந்திரங்கள், வலைகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்த பின் மீண்டும் வருகைதந்து கதைக்குமாறு கூறியிருந்தார்கள். இந் நிலையில் இயந்திரங்களையும் வலைகளையும் கொள்வனவு செய்வதற்கு போதுமான பணம் அந்தக் காலத்தில் எங்களிடம் இருக்கவில்லை.

அதற்குப்பின் 2017 ஆம் ஆண்டு எங்களிடமிருந்த நகைகளையும் காணிகளையும் சொத்துக்களையும் விற்றும் வங்கிகளில் கடன் வாங்கியுமே உபகரணங்களை கொள்வனவு செய்தோம். கிட்டத்தட்ட ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் 20 தொடக்கம் 25 இலட்சம் ரூபா வரையில் செலவாகியிருக்கின்றது. இந் நிலையில் எங்களுக்கு நவீன முறையிலான மீன்பிடிக்கு அனுமதி தந்தார்கள். இந்நிலையில் நாங்கள் தொழில் செய்யும் போது நவீன முறையில் அனுபவம் இல்லாத காரணத்தினால் பெரிதாக இலாபம் கிட்டவில்லை.

அதுக்குப்பின் 2018 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் குறித்த தொழிலை செய்வதற்கு அனுமதியை நீரியல் வளத்திணைக்களத்திடம் மீண்டும் பெற்றுக் கொண்டோம். எனினும் மூன்று மாதங்கள் குறித்த தொழிலை செய்யமுடியாது இருந்தபோதிலும் அதன் பின் நாங்கள் குறித்த நவீன முறைத் தொழிலில் ஈடுபட்டு இலாபத்தைப் பெற்றுக் கொண்டிருந்தோம்.

இந்நிலையில் தான் முல்லைத்தீவுப் பகுதியில் ஒருசில சங்கங்களும் சம்மேளனங்கள் இரண்டாகப் பிரிந்து பிளவு ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடற்றொழில் அமைச்சரும் நீரியல் வளத் துறை பணிப்பாளர் நாயகமும் முல்லைத்தீவு உதவிப்பணிப்பாளரும் இணைந்து எமக்கு கூட்டம் ஒன்று நடத்தியிருந்தனர்.

இக்கூட்டத்தில் அரசியல் வாதிகள் பலரும் வருகைதந்து குறித்த சுருக்குவலைத் தொழிலைத் தற்காலிகமாக நிறுத்தி குழுவொன்று



அமைத்து பரிசீலனை செய்து மீண்டும் தொழிலுக்கான அனுமதியைத் தருவதாகக் கூறியிருந்தனர்.

இவர்களால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிசோதனையின் பின் மீண்டும் எமக்கு அனும்தி தந்தனர்.

பின் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைய குறித்த அனுமதியை 6 நாட்களுக்குள் நிறுத்திவிட்டனர். அன்று நிறுத்தப்பட்ட அனுமதி இதுவரை எமக்கு கிடைக்கவில்லை.

ஆனால் தென்னிலங்கையில் இருந்துவரும் படகுகளுக்கு பணிப்பாளர் நாயகம் ஒரு கடிதத்தை வழங்கினால் முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் ஏன் என்று ஒரு கேள்வியுமின்றி அனுமதியைக் கொடுக்கின்றார்.

அட்டை, சங்கு வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல், சின்னக்கண் வலை பயன்படுத்தி மீன்பிடித்தல் போன்றவற்றுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் எமக்கு அனுமதி தருவதில்லை.

நாங்கள் கடனில் மூழ்கிவிட்டோம். எமக்கு இன்னும் மூன்று மாதம்தான் தொழில் வாய்ப்பு இருக்கின்றது. உண்மையிலேயே எமக்கு குறித்த தொழிலுக்கான அனுமதி மறுக்கப்பட்டால் நாங்கள் தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

எமது இந்த முடிவுகளுக்கு நீரியல்வளத் திணைக்களமும் கடற்றொழில் அமைச்சுமே காரணமாக அமையும்.

திருகோணமலை மாவட்டத்தில் மீனவர்கள் எங்கள் கடலில் மீன் பிடிக்கின்றனர். எங்களை மாற்றுத் தொழிலை பழைய முறையில் செய்யச் சொல்கின்றார்கள். அப்படி தொழில் செய்வதற்கு கடற்பரப்பு எங்கள் வசம் இல்லை.

தென்பகுதி தொழிலாளர்கள் 2 கிலோமீற்றர் கடற்பரப்புக்குள் 500 இற்கும் மேற்பட்ட படகுகளைக் கொண்டு வலை போட்டு 40 குதிரை வலுவுடைய இயங்திராங்களைப் பயன்படுத்தி மீன்பிடிக்கின்றனர். இதற்கு யாரும் இடையூறாக இல்லை.

இந் நிலையில் எங்களையும் குறித்த கடற்பரப்புக்குள்ளேயே தொழிலைச் செய்யச்சொன்னால் எப்படிச் செய்வது.

மீள்குடியேற்றப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை முல்லை தீவில் கிராமப்புறமாக உள்ள மீனவர்களான நாம் ஒதுக்கப்பட்டு வருகின்றோம்.

கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் மற்றைய அரசியல்வாதிகளும் எங்களை மனித உணர்வோடு பார்ப்பதில்லை என்றுதான் சொல்வோம் என மேலும் தெரிவித்தார். (9-299)

மரணதண்டனை அமுல்படுத்தும் அதிகாரம் என்னிடமே!

# யாரும் இது குறித்து பேசவேண்டாம்

## அமைச்சரவை கூட்டத்தில் மைத்திரி விடாப்பிடி



(கொழும்பு)

மரணதண்டனை குறித்து எவரும் பேசவேண்டாம். மரண தண்டனையினை அமுல்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதியான என்னிடமே உள்ளது.

இந்த விடயத்தில் அமைச்சரவை தீர்மானம் எடுக்க முடியாது, நீதிமன்றத்தில் இந்த விடயம் உள்ளபடியினால் இது குறித்து பேசவிரும்பவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை அமுலாக்கத்திற்கு எதிரான பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்கு விசாரணைகள் நிறைவுடைந்தவுடன் அது குறித்த தீர்மானத்தை நான் எடுப்பேன். இந்த விடயத்தில் நான் உறுதியாக உள்ளேன் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது மரண தண்டனை அமுலாக்கல் தொடர்பில் அமைச்சர்கள் சிலர் கருத்துக்களை முன்வைத்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த நிதி அமைச்சர் மங்கள சமரவீர,மரண தண்டனை அமுலாக்கும் விடயத்தை ஜனாதிபதி மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இந்தக் கோரிக்கையினை உங்களது நன்மை கருதியே நான் விடுக்கின்றேன். மரண தண்டனை அமுலாக்கப்பட்டால் உங்களது பெயர் கெட்டுவிடும். சர்வதேச ரீதியில் அவ்பெயரை சந்திக்கவேண்டிவரும். உங்களைப் பற்றி மோசமாக பேசுவார்கள். உங்கள் மீதுள்ள நல்லபிப்பிராயத்தின் காரணமாகவே இந்தக் கோரிக்கையை நான் விடுக்கின்றேன். மரண தண்டனை அமுல்படுத்தப்பட்டால் இலங்கைக்கு நிதி ரீதியாக கட்டுப்பாடுகளை சர்வதேச சமூகம் விதிக்கும் நிலைமை ஏற்படும். இதனால் வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் போகும். எனவே இந்த முடிவினை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, மரண தண்டனை அமுலாக்கல் தொடர்பில் யாரும் பேசவேண்டாம். நீதிமன்றத்தில் இந்த விடயம் தொடர்பில் 10 இற்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே இந்த விடயம் குறித்து நான் பேசவிரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

இந்த வேளையில் கருத்துரைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , நீதிமன்றத்தில் மரண தண்டனை அமுலாக்கத்திற்கு எதிராக வழக்குகள் இருந்தாலும் இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசமுடியும். தீர்மானங்கள் எடுக்க முடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி , மரண தண்டனை அமுலாக்கம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியான என்னிடமே உள்ளது. இந்த விடயத்தில் தீர்மானம் எடுப்பதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் இல்லை. மரண தண்டனை அமுலாக்கம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால் வழக்கு விசாரணை முடியும் வரையில் பொறுத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மரண தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வழக்குகளிலும் போதை வஸ்து குற்றவாளிகளுக்கு மட்டும் ஏன் மரண தண்டனையை வழங்குகின்றீர்கள், எந்த அடிப்படையில் அவ்வாறு தெரிவு செய்யப்பட்டது என்பது தொடர்பிலேயே கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது. மரண தண்டனை அமுலாக்கத்திற்கு எதிராக வழக்குகள் தாக்கலாகவில்லை. எனவே வழக்கு விசாரணை முடிந்த பின்னர் இந்த விடயம் தொடர்பில் தீர்மானிப்பேன்.

இவ்விடயம் தொடர்பில் எவரும் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று ஜனாதிபதி எடுத்துக்கூறியுள்ளார். இதனையடுத்து மரண தண்டனை விவகாரம் தொடர்பில் அமைச்சர்களின் விவாதம் முடிவுக்கு வந்தது.(7-9)



அரச வங்கி ஓய்வூதியர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு கோரி நேற்றுப் புதன்கிழமை இலங்கை வங்கி யாழ்ப்பாணம் மேற்தரக் கிளைக்கு முன்பாகப் போராட்டம் நடைபெற்றது.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# கடலில் தத்தளித்த மீன்பிடிப்படகு கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்பு



கிரிந்த கலங்கரை விலக்கத்திலிருந்து 24 கடல் மைல் தூரத்தில் இயந்திரக் கோளாறு காரணமாக பாதிப்படைந்த மீன்பிடிப் படகொன்று கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளதோடு, குறித்த படகிலிருந்த மீனவர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் வைத்துப் படகு பாதிப்படைந்துள்ளதாக கடற்படைத் தலைமையகத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து படகு மீட்கப்பட்டுள்ளது.

"நிமேஷிகா" என்று கூறப்படும் இப்படகு "ஷானு" என்ற பிறிதொரு மீன்பிடிப் படகின் உதவியுடன் கடற்படையினரால் மீட்கப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (7)

## குறை'களை' பதிகம் 56

### செருப்போடு அறுகரிசியும் கோழி ஆணத்தோடு போசனமும்

இல்லறம் எனும் நல்லறம் தழைக்க
மங்கல நாண் பூட்டும்
மகத்துவப் பண்பாடு
நம் தமிழர்க்குரியதாம்

முன்பெல்லாம் வீடுகளில்
நாள் பார்த்து
பந்தல் கால் நட்டு
சொக்கட்டான் பந்தலிட்டு
ஊர்கூடி உறவுகள் கூடி
எண்ணெய்த் தாச்சி வைத்து
நாளுக்குப் பால்றொட்டி சுட்டு
பலகாரம் செய்து
ஊர்ப்பெண்களெல்லாம்
கூடிக்கதைத்து குதூகலிக்கும் திருமணவீடு

இப்போ!
குளிர்தரும் மண்டபங்கள்
போமலின் விசிறிய வாழைக்குலைகள்
வீடியோ, புகைப்படம்
ஒரே கலரில் சேட் அணியும்
இளவல்கள் கூட்டம்
சுகர் ஏற்றும் சோடா, குளிர்பானம்
பூந்திலட்டு, வெடிங் கேக்
மணமக்கள் வீற்றிருக்க
விதம்விதமான மணவறைகள்
புதுப்புது நடைமுறைகள்

பார்வதியும் பரமேஸ்வரனும்
பாவனையில் மணமக்கள்
பிளாஸ்ரிக் மாலையிட்டு
முன்னம் அறிமுகமான
சிரிப்புக் கதைப்புடன்
கலகலப்பாய் வீற்றிருக்க,

முண்டியடித்து அறுகரிசியிட்டு
வாழ்த்தவோர் பெரும்கூட்டம்
உறவுகள் வலப்பக்கம்
பணிபுரி அலுவலகத்தோர்
இடப்பக்கமாய் மேடையை ஆக்கிரமிக்க,

அறுகரிசியிட்டு ஆசிர்வதிக்கும்
அந்தக் காலத்து நடைமுறை
செருப்போடும் குதிக்கால் சான்ரிலோடும்
சப்பாத்து சகிதமுமாய் நடக்கிறது

வெண்ணூல் பூண்டு
வேதம் ஓதி, யாகம் செய்து
காப்புக்காட்டி, கடுக்கண் பூட்டி
நாளெடுத்து பொன்னுருக்கி
செய்த தாலி ஏறியிருக்க,
செருப்போடு மேடை ஏறிச்
செய்கின்ற சீர்கேடு
என்றுதான் போகுமோ?

இன்னும்
கோவில் போல்
புனிதமாய்ப் போற்றவேண்டிய
திருமண மண்டபங்கள்
இரவுத் திருவிழாவில்
ஆடொடு புறொயிலர் கோழியும்
முட்டையும் சேர்த்து
மாமிசப் படையல் நடக்கிறது

கடவுளே!
வேதமும் யாகமும் ஓதுகின்ற இடம்
ஏன் இந்த ஆடறுப்பும் கோழிவெட்டும்
வேண்டாம் இந்தத் தோசம்
திருமண மண்டபங்கள்
எங்கள் வாழ்வு தொடங்கும்
புனித இடங்களல்லோ!
ஆதலால் மண்டபத்து உரிமையாளரே
அசைவம் விட்டு சைவத்தோடு
எங்கள் ஆசாரம் பேணுக

பணம் இன்று வரும் நாளை போகும்
ஆன்மீகப் பண்பாட்டுச் செழுமையே
எங்களை வாழ வைக்கும்

கூத்தனார்

# நீராவியடி பிள்ளையார் ஆலய

# பொங்கல் விழாவின் போது பிரித் ஓத விகாராதிபதி நடவடிக்கை

## இனங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்படுத்த முயற்சி என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக வாழ்விடமும் வழிபாட்டுத் தலமுமான செம்மலை நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தில் அத்துமீறிக் குடியேறிய பௌத்த துறவி பௌத்த விகாரை அமைத்து வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதனால் தமிழர்களின் வழிபாட்டு உரிமையும் நில உரிமையும் பறிக்கப்பட்டுள்ளதுடன் இரு மதங்களுக்கிடையிலான சிக்கலை உருவாக்கும் நடவடிக்கையில் பௌத்த பெரும்பான்மை இனத்தவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றுள்ள நிலையில் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் பிரச்சினையினைத் தூண்டும் நடவடிக்கையில் சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அந்தவகையில் எதிர்வரும் 6 ஆம் திகதி நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தின் பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளதாக நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு கொக்குத்தொடுவாய் கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு 108 பானைகளில் பொங்கல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கு எதிராக குறித்த விகாரையின் விகாராதிபதி இன்று தொடக்கம் குறித்த விகாரையில் பிரித் ஓதும் வழிபாடுகளை மேற்கொள்ளவுள்ளதுடன் தெற்கில் இருந்து சிங்கள ராவய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்டவர்களை வரவழைத்து பாரிய பௌத்த வழிபாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீராவியடிப்பிள்ளையார் ஆலயம் மற்றும்பௌத்த விகாரைப் பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக நீடிக்கும் பிரச்சினையாகவும் இரு மதங்களுக் கிடையில் முறுகல் ஏற்படும் நிலைப்பாட்டினையும் இது தோற்றுவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# "தேசிய மொழிகள் தினம்"

## விழிப்புணர்வு செயலமர்வு



அரசகரும மொழி கொள்கையை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரசகரும மொழி கொள்கையை நடைமுறைப்படுத்தும் வாரம் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் ஜூலை 1 முதல் ஜூலை 5 ஆம் திகதி வரை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வவுனியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் கமலதாஸின் நெறியாள்கையின் கீழ் வவுனியா சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள பலநோக்கு பயிற்சி நிலையத்தில் தேசிய மொழிகள் தின விழிப்புணர்வு செயலமர்வு நேற்று இடம்பெற்றது.

இச்செயலமர்வில் மொழி உரிமை மீறல், மொழியின் தேவை, மொழி ஏன் அவசியம், மொழி சம்பந்தமான விளக்கங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. இவ் விழிப்புணர்வு செயலமர்வில் சகவாழ்வு சங்க உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-250)

# போதைக்கு எதிராக மாணவர்கள் பேரணி



போதைப் பொருள் பாவனையை தடை செய்யக் கோரி வவுனியா, செட்டிகுளம் மகாவித்தியாலய மாணவர்கள் பேரணி ஒன்றினை நேற்று மேற்கொண்டதுடன், பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

செட்டிகுளம்மகாவித்தியாலயத்தின் முன்றலில் ஆரம்பமான இந்தப் பேரணி செட்டிகுளம் மதவாச்சி வீதி வழியாகச் சென்று வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தை அடைந்தது.

மேலும் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரனிடம் செட்டிகுளம் பகுதியில் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துமாறு மாணவர்கள் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். இந்த ஊர்வலத்தில் செட்டிகுளம் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும்கலந்து கொண்டனர்.(9-250)

# பெண்களுக்கு தொல்லை கொடுத்தவர் பொலிஸாரால் கைது

வவுனியா, குடியிருப்பு பகுதியில் உள்ள பெண்களின் விடுதி ஒன்றிற்கு தொடர்ச்சியாக தொல்லை கொடுத்து வந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா, குடியிருப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பெண் அரச உத்தியோகத்தர்கள் சிலர் வாடகைக்கு தங்கியுள்ளனர். குறித்த வீட்டிற்கு சிலர் இரவு வேளைகளில் தொல்லை கொடுத்து வந்துள்ளனர். இதனையடுத்து குறித்த வீட்டு உரிமையாளரான வயது முதிர்ந்த பெண் இதனை அப்பகுதி இளைஞர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இளைஞர்கள் குறித்த நபர்களை மடக்கிப் பிடிக்க திட்டமிட்டு இருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் நபர் ஒருவர் குறித்த வீட்டிற்கு தொல்லை கொடுத்துள்ளார். இதனையடுத்து குறித்த நபர் இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து பொலிஸாரிடம் குறித்த நபரை ஒப்படைத்துள்ளனர். இதன்பின் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா பொலிஸார் குறித்த நபரை எச்சரித்து நேற்றுப் பிணையில் செல்ல அனுமதித்தனர். (9-250)




# பாதுகாப்பு கடவையை அமைத்து தருமாறு போராட்டம்



கிளிநொச்சி 155 ஆம் கட்டை சந்தியில் அமைந்துள்ள புகையிரத கடவையில் பாதுகாப்பு கடவையை அமைத்துத் தருமாறு கோரி நேற்றுக் காலை போராட்டம் ஒன்று பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டது. கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தின்போது படையினர் 6பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்த குறித்த பாதையை பாதுகாப்பான கடவையாக மாற்றி தருமாறு மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதனால் நேற்றுக் காலை யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு புகையிரதம் சுமார் 1 மணிநேரம் தாமதித்தே பயணத்தை தொடர வேண்டி ஏற்பட்டது.

போராட்டத்தை மேற்கொண்ட மக்களை கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் புகையிரத திணைக்கள அதிகாரிகள் சந்தித்து ஒரு மணி நேர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். குறித்த பாதையின் ஊடாக பாடசாலை மாணவர்கள், ஆடை தொழிற்சாலை ஊழியர்கள், பொதுமக்கள் என பலர் பயணிக்கின்ற நிலையில், இப்பகுதியில் பாதுகாப்பான கடவையை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த அதிகாரிகள் ஒலியுடன் கூடிய பாதுகாப்பு வெளிச்சத்தை அமைத்து பாதுகாப்பான போக்குவரத்தை மேற்கொண்டு தருவதாக கூறிய போதும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் மின்சாரத்தில் இயங்கும் பாதுகாப்பு கடவையை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த கோரிக்கையை எழுத்து மூலமாக வழங்குமாறும், தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் புகையிரத திணைக்கள அதிகாரிகள் கூறினர்.

குறித்த வாக்குறுதியை ஏற்றுக்கொண்ட மக்கள் அதன் பின்னர் தமது போராட்டத்தை கைவிட்டனர். அதன் பின்னர் புகையிரத சேவைகள் வழமைக்கு திரும்பின. குறித்த போராட்டம் இடம் பெற்ற பகுதியிலேயே கடந்த மாதம் இடம்பெற்ற விபத்தில் 6 படையினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த வீதியின் ஊடாக பல்லாயிரம் மக்கள் அன்றாடம் போக்குவரத்தில் ஈடுபடுவதாகவும், குறித்த வீதியை பாதுகாப்பான வீதியாக மாற்றம் செய்து தருமாறு மக்கள் இதன்போது கோரிக்கை விடுத்திருந்தனர். (9)



**யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் 6 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்பு வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகள் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. நோர்வே நாட்டில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியுடன் குறித்த வாழ்வாதார உதவி 6 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு உதவிகளை வழங்கிவைத்தார்.**

# நல்லிணக்கம் தொடர்பில்
## மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு

மாணவர்கள் மத்தியில் இனம், மதம் சார்ந்த பிரிவினைகளை நீக்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நிலைமாறுகால நீதி மற்றும் மதங்கள் ஊடாக நல்லிணக்கம் தொடர்பாக தெளிவூட்டும் விசேட நிகழ்வு நேற்று முன்தினம் மன்.புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மற்றும் மன்.புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும் இடம் பெற்றது.

தேசிய சமாதான பேரவை மற்றும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அண்மைக்காலமாக நாட்டில் இடம் பெறும் மத, இன முரண்பாடுகளின் மத்தியில் மாணவ சமுதாயம் எவ்வாறு விழிப்புடன் செயற்படலாம் என்பது தொடர்பாகவும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் மாணவர்களின் பங்களிப்பை எவ்வாறு முன்னேற்றுவிக்கலாம் என்பது தொடர்பாக ஆசிரியர்களாலும் மாணவர் தலைவர்களாலும் விரிவுரைகள் வழங்கப்பட்டன. (9-285)



மன்னார் மடுக்கரை பிள்ளையார் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான புத்தக பைகள் இலங்கை இந்துக் கட்சியினரால் அறநெறி தலைமை ஆசிரியரிடம் வழங்கப்பட்டதுடன் ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு,மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கல் தொடர்பாகவும் கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடப்பட்டது.

# வங்கி ஊழியர் கடன்களுக்கு வரி வேண்டாம்
## அரச வங்கி ஊழியர்கள் போராட்டம்





வங்கி ஊழியர் கடன்களுக்கு வரி வேண்டாம் என்ற கோரிக்கையை முன் வைத்து அரச வங்கி ஊழியர்கள் நேற்று வவுனியாவில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.


இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வங்கி ஊழியர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் புகையிரத நிலைய வீதியிலுள்ள பிரதான இலங்கை வங்கியிலிருந்து ஆரம்பமாகி மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக கண்டிவீதி வழியாக கார்கில் பூட்சிட்டிக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் ஊழியர் உணவிற்கு தேநீருக்கு வரி வேண்டாம், இல்லாமல் ஆக்கப்பட்ட ஓய்வூதியத்தை மீள் வழங்கு, வங்கி ஊழியர்களின் உரிமையை உறுதி செய், ஓய்வூதியக் கொடுப்பனவு வழுக்களைத் திருத்துக, பெற்றுக்கொள்ளத் தக்க ஒரு ஓய்வூதியத்தை தருக போன்ற தமிழ், சிங்கள வசனங்களைத் தாங்கிய பதாகைகளுடன் பிரதான வீதியூடாகச் சென்ற வங்கி ஊழியர்கள் போராட்டத்தினை மேற்கொண்டனர். (9-299).

# கிளி.மாவட்ட பொது வைத்தியசாலையின்
# பொது மலசலகூடத்தில் சுகாதார சீர்கேடு
## உடனடியாக சீரமைக்குமாறு பொது மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பொதுமக்கள் பயன்படுத்தும் மலசலகூடத்தில் சுகாதார சீர்கேடு தொடர்பில் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் உள்ள மலசலகூடங்கள் நிறைந்து வழிவதாகவும், பெண்கள் பயன்படுத்தும் மலசல கூடம் மிகவும் சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதாகவும் உரிய முறையில் கழிவு முகாமைத்துவம் பேணப்படாமையால் மக்கள் நாளாந்தம் அவதியுறுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.



நாள் ஒன்றுக்கு பல நூற்று கணக்காண வெளிநோயாளர்கள் குறித்த வைத்தியசாலைக்கு வருகை தருவதுடன், நோயாளர் விடுதிகளில் தங்கிநின்றும் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களை பார்வையிடவும் பலர் வருகை தருகின்றனர்.

அவ்வாறு வைத்தியசாலை சேவையை பெற்றுக்கொள்ள வருகைதரும் மக்களுக்கு இவ்வாறான நிலை காணப்படுகின்றமையால் சுகாதாரத்தை பேண முடியாதுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கே பெரிய வைத்தியசாலையாக காணப்படும் குறித்த வைத்தியசாலையின் சுகாதாரம் தொடர்பில் இதுவரை அதிகாரிகள் பார்வையிடுவதில்லையா எனவும், சாதாரணமான விடயங்களிற்கு வழக்குகளை தொடரும் சுகாதார பரிசோதகர்களும் அதிகாரிகளும், இவ்வைத்தியசாலையின் சுகாதாரம் தொடர்பில் கண்டுகொள்ளாமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, பொதுமக்களிற்கான சுகாதார வசதியினை உறுதிப்படுத்தி தருமாறும், முறையான கழிவகற்றலை மேற்கொள்வதற்கான வசதிகளை வைத்தியசாலைக்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# எமது இனத்தின் உரிமைகளை விற்பதற்கு
## நாங்கள் அரசியலுக்குள் வரவில்லை-சாந்தி எம்.பி.

(கண்டாவளை)

நாங்கள் எங்கள் இனத்தையும் உரிமைகளையும் விற்பதற்காக அரசியலுக்குள் வரவில்லை என தமிழ் தேசியக்கூட்டமைப்பினுடைய பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் மக்களின் வாக்குகளைப்பெற்று கதிரைகளை அலங்கரிப்பவர்கள் அல்ல, எங்கள் மக்களின் அன்றாட துன்ப துயரங்களுக்குள் இணைந்து பயணித்துக்கொள்பவர்கள்.

நிதிகள் கிடைப்பதற்கு தற்போது தமிழ்தேசியக்கூட்டமைப்புக்கு வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றது. இந்த வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த மக்களின் நிம்மதியான விடிவிற்காக தம்மைத்தாமே ஆழுகின்ற சுயநிர்ணய உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்காக தமிழ் தேசியக்கூட்டமைப்பு எப்போதும் மக்களுடன் பயணித்துக் கொண்டிருக்கும்.

விலை போய் பதவிகளைப் பெற்று எங்களை வளப்படுத்தி அலங்கரித்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல. அவ்வாறெனின் மகிந்த பிரதமர் என அறிவித்தபோது நாங்கள் விலைபோயிருப்போம். அப்போது விலை போன வியாழேந்திரன் இப்போது நடுத்தெருவில் இருப்பது எல்லோரும் அறிந்தது.


நாங்கள் எங்கள் உரிமைகளையும் இனத்தையும் விற்பதற்காக அரசியலுக்குள் வந்தவர்கள் அல்ல என அவர்மேலும் தெரிவித்தார். (9-315)






வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியால்யத்தின் வித்துவம் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் காலை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் கோ.குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்வி, விளையாட்டுக்கள் உட்பட பல்வேறு மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்களிற்கான பரிசில்கள் பிரதம விருந்தினர்களால் வழங்கப்பட்டதுடன். பாடசாலை ஆசிரியர்களிற்கு கௌரவமளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.இப்பாடசாலையின் முதலாவது சஞ்சிகையான "வித்துவம்" சஞ்சிகையினை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம்.கனீபா வெளியிட்டு வைத்தார். (படங்கள்:-நெளுக்குளம் செய்தியாளர்)

# இரகசிய நீர்மூழ்கியில் தீ! 14 மாலுமிகள் உயிரிழப்பு



(மொஸ்கோ)
ரஷ்யாவின் மிகவும் இரகசிய நீர்மூழ்கியொன்றில ஏற்பட்ட தீ விபத்தில் 14 மாலுமிகள் உயிரிழந்தனர்.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வழமைக்கு மாறாக தனது இரகசிய நடவடிக்கை நீர்மூழ்கியில் ஏற்பட்ட தீ விபத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.


குறிப்பிட்ட நீர்மூழ்கியின் பெயர் விபரங்களை வெளியிடாத ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு ஆழ்கடல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த கப்பலிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நீர்மூழ்கியால் கடலிற்கு அடியில் நீண்ட தூரம் செல்ல முடியும் எனவும் கடலிற்குள் அடியில் உள்ள கேபிள்களை ஒட்டுக்கேட்கும் சிதைக்கும் நடவடிக்கையில் இந்த நீர்மூழ்கி ஈடுபட்டிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்ய கடற்பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே கப்பலில் தீ பிடித்தது. தீயினால் ஏற்பட்ட வாயுவை சுவாசித்த மாலுமிகள் உயிரிழந்துள்ளனர் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (7)

# நான் காங்கிரஸ் தலைவர் இல்லை

## ராகுல் காந்தி தெரிவிப்பு



(டில்லி)
காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த ராகுல் காந்தி. ராஜினாமா கடிதத்தை ஏற்கனவே கொடுத்ததால் தான் அக்கட்சியின் தலைவர் இல்லை என தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியை சந்தித்தது. இந்த தோல்விக்குப் பொறுப்பேற்று பல்வேறு மாநிலக் கட்சித் தலைவர்களும், நிர்வாகிகளும் தங்கள் பதவியை ராஜினாமா செய்து வருகின்றனர்.

இதனையடுத்து ராகுல் காந்தியும் இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்று தலைவர் பதவியில் இருந்து விலகப்போவதாக தகவல்கள் வெளியானது. அதன் பின்னர் நடத்தப்பட்ட காங்கிரஸ் காரிய கமிட்டி ஆலோசனை கூட்டத்தில் ராகுல் மீண்டும் தலைவராக தொடர முடிவு செய்யப்பட்டது.


இதையடுத்து ராகுல் காந்தி தனது ராஜினாமா முடிவில் உறுதியாக இருக்கிறார் என செய்திகள் வெளியாகின. ராகுல் இப்படி முடிவெடுத்திருந்தால், உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தின் வாசலில் அக்கட்சி தொண்டர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் காங்கிரஸ் கட்சியின் தொண்டர் ஒருவர், ராகுல் காந்தி ராஜினாமா செய்யக்கூடாது என் பதற்காக தூக்கிட்டு தற்கொலை செய்ய முயன்றார். பின்னர் பொலிஸார் அவரை சமாதானப்படுத்தி காப்பாற்றினர்.

இந்நிலையில் நேற்றைய தினம் ராகுல் காந்தி தனது ராஜினாமா குறித்து தெரிவிக்கையில் 'நான் ஏற்கனவே கட்சித் தலைமையிடம் எனது ராஜினாமா கடிதத்தை கொடுத்துவிட்டேன். நான் காங்கிரஸ் தலைவர் இல்லை.

காங்கிரஸ் காரிய கமிட்டியை உடனடியாக கூட்டி புதிய தலைவரை விரைவில் தேர்ந்தெடுங்கள்' என தெரிவித்தார். (7)

# மகாராஷ்டிராவில் அணை உடைப்பு 6 பேர் பலி; 20 பேர் மாயம்



இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் தென்மேற்கு பருவ மழை அதி தீவிரமடைந்து பெய்து வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை முதல் 5 நாட்களாக இரவு, பகலாக விடாமல் கொட்டித் தீர்த்து வருவதால் மும்பை நகரமே வெள்ளத்தில் தத்தளித்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் வீடுகளும் வீதிகளும் தெரியாத அளவுக்கு வெள்ளக்காடாக மாறி உள்ளன. வீதி, ரயில், விமான போக்குவரத்தும் முடங்கி காணப்படுகின்றது.

1974 ஆம் ஆண்டு மும்பையில் இதேபோன்ற பிரளயம் ஏற்பட்டது. அப்போது ஒரே நாளில் 375.2 மி.மீ. மழை பெய்தது. 45 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது அதே மழை அளவு பதிவாகி உள்ளது.

அதாவது, நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 375.2 மி.மீ. பதிவாகி வரலாறு காணாத மழை பெய்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

# நைஜீரியாவில்

# 50 பேர் உடல் கரு

(நைரோபி)

**நைஜீரியாவின் அபுஜா நகரில் எரிபொருள் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளனாதில் 50 பேர் உடல் கருகி பலியாகியுள்ளனர்.**

நேற்று முன்தினம் எரிபொருள் ஏற்றிச்சென்ற வாகன மொன்று விபத்துக்குள்ளானதில் அதில் இருந்து எரிபொருள் வெளியேறியது. அதனை எடுக்க முற்பட்டபோதே குறித்த வாகனம் எதிர்பாராத விதத்தில் வெடித்துச் சிதறியதில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் 50 பேர் தீயில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன. இவ்வாறு ஏற்பட்ட சம்பவத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமென அந்நாட்டு தகவல்கள் தெரிவித்துள்ளதோடு விபத்தில் படுகாயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# லிபியா குடியேற்றவாசிகள 40 பேர் உயிரிழப்பு;



(திரிபோலி)
லிபியாவிலுள்ள குடியேற்றவாசிகள் தங்க வைக்கப்பட்டிருந்த தடுப்புக்காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் திரிபோலிக்கு கிழக்காக உள்ள தஜோராப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு நிலையத்தின் மீதே

# ரஷ்யாவில் வெள்ளப் உயிரிழப்பு 20 ஆக



ரஷ்யா நாட்டின் சைபீரியா மாகாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் எதிரொலியாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கு 20 பேர்

# கோரவிபத்து
# ருகி உயிரிழப்பு!



## ள் மையத்தில் தாக்குதல்!
## ; 80 பேர் படுகாயம்

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள பகுதியில் சுமார் 120 குடியேற்ற வாசிகள் தங்கியிருந்த நிலையில் சுமார் 80 பேர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனவே உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் லிபிய தேசிய இராணுவத்தினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லிபிய பிரதமர் பயாஷ் அல் ஷேய்ரா குற்றம் சாட்டியுள்ளதுடன் தன்னுடைய கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

குறித்த தடுப்புக் காவல் நிலையத்தில் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த குடியேற்றவாசிகள் பெரும்பாலானோர் தங்கியிருந்ததாக லிபிய அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக ஐரோப்பிய நாடுகளை நோக்கி படையெடுக்கும் குடியேற்றவாசிகளினால் லிபியா ஓர் இடைத் தங்கல் மையமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதேவேளை, 2011 ஆம் ஆண்டு லிபியாவில் கடாபி அரசாங்கம் வீழ்த்தப்பட்டதை அடுத்து உருவாக்கப்பட்ட லிபிய தேசிய இராணுவத்தை 2015 ஆம் ஆண்டு சர்வதேச நாடுகளின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட லிபிய தேசிய உடன்பாட்டு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. குறித்த சர்வதேச ஆதரவு அரசாங்கத்திற்கு எதிராக லிபிய தேசிய அரசாங்கம் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## ப்பெருக்கு
## அதிகரிப்பு



உயிரிழந்தனர்.

ரஷ்யா நாட்டின் சைபிரியா மாகாணத்துக்குட்பட்ட தென்கிழக்கு பகுதிகளில் கடந்த 4 நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதன் எதிரொலியாக இம் மாகாணத்தின் முக்கிய நகரங்கள் மற்றும் கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

குறிப்பாக, இர்குட்ஸ்க் நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, காணாமல் போன சுமார் 20 பேரை தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அருகில் உள்ள டுலுன்ஸ்கி, சுன்ஸ்கி, நிஸ்நியூடின் ஸ்கி, டைஷெட்ஸ்கி, ஜிமின்ஸ்கி, குய்டுன்ஸ்கி ஆகிய மாவட்டங்களில் அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (7)

# ஜப்பானில் நீடிக்கும் கனமழை!
## மக்களை வெளியேறுமாறு உத்தரவு

(டோக்கியோ)

ஜப்பானின் தென்மேற்கு பிராந்தியத்தில் அதிதீவிர கனமழை பெய்து வருவதால், ககோஷிமா நகரில் உள்ள 6 லட்சம் மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. கியூ தீவில் கனமழை நீடிக்கும் என்றும், மழை காரணமாக பல்வேறு இடங்களில் மண் சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில், கியூ தீவில் உள்ள ககோஷிமா நகரில் நேற்று முன்தினம் இரவில் இருந்து இடைவிடாமல் கனமழை கொட்டித் தீர்க்கிறது. இதனால் நகர் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. இதையடுத்து அந்த நகரில் உள்ள 6 இ

லட்சம் மக் களை வெளியேற்றி, பாதுகாப் பான இடங்களில் தங்க வைக் கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. (7)

# தென்சீனக் கடலில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை சோதனை

## பென்டகன் தகவல்

(வோஷிங்டன்)

சீனா தனது தென் கடற்பிராந்தியத்தில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை சோதனை செய்துள்ளதாக பென்டகன் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த சில நாட்களில் குறைந்து ஒரு கப்பல் எதிர்ப்பு ஏவுகணை ஸ்பாட்லி தீவுப் பகுதியில் பரிசோதிக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவம் நேற்று உறுதி செய்துள்ளது.

ஸ்பாட்லி தீவுகளுக்கு அருகிலுள்ள தென் சீனக் கடலில் மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பிலிருந்து சீனா தனது ஏவுகணையை செலுத்தியமை தொடர்பாக பென்டகன் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளதாக அதன் பேச்சாளர் லெப்டினன் டேவ் ஈஸ்ட்பர்ன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கடற்படைகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு அறிவிப்பில், தென் சீனக் கடலின் ஒரு பெரிய பகுதியில் நாளை வரை இராணுவப் பயிற்சிகளை நடத்தப்போவதாக சீனா தெரிவித்திருந்தது. இந்த பயிற்சிகள் ஸ்பாட்லி தீவுகளுக்கு வடக்காக இடம் பெறும் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தவகையில், கப்பல் எதிர்ப்பு ஏவுகணை சோதனையும் இராணுவப் பயிற்சிகளில் ஒன்றாகவே இடம்பெற்றதாக என்.பி.சி செய்திச் சேவை முன்னதாகவே தெரிவித்துள்ளது.

நகர்ந்து கொண்டிருக்கும் கப்பல்களை பெலஸ்டிக் வகையான ஏவுகணைகள் சென்று தாக்கியழிக்கக் கூடிய வல்லமையை கொண்டுள்ளன.

இதனிடையே, தென் சீனக் கடலில் சீனா ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளமை அச்சுறுத்தல் விடுக்கும் செயலாக இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. (7)

## ஆசிப் அலி, நவாஸ் ஷெரிப் ஊழல் விவகாரம்

# கொள்ளையடித்த பணத்தைத் தந்துவிட்டு
# நாட்டைவிட்டு வெளியேறுங்கள்- பாக்.பிரதமர்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமரும் மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை திருப்பித் தந்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறுவதில் எனக்கு ஆட்சேபனை, இல்லை என பிரதமர் இம்ரான் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் ஆகியோருக்கு எதிராகப் பல்வேறு ஊழல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவர்கள் சில வழக்குகளில் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறையில் அடைபட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி நேற்று மற்றொரு ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டார்.

பிரபல தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், “முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் மகன்கள் அவரை சிறையில் இருந்து விடுதலை செய்வதற்கு இரு வெளிநாடுகள் மூலம் பாகிஸ்தான் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

ஆனால், ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் கொள்ளையடித்த பணத்தை திருப்பித் தராமல் அவர்கள் நாட்டை விட்டு வெளியே போக அனுமதிக்க மாட்டேன்.

நாட்டின் பணத்தை தந்து விட்டு அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம்'' என மேலும் தெரிவித்தார். (7)

# எமக்கெதிரான குற்றச்சாட்டுக்களை முடிந்தால் நிரூபித்துக் காட்டுங்கள்

## அத்துரலிய ரத்ன தேரருக்கு றிசாத் சவால்



**(கொழும்பு) முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எதிராக முன்வைத்து வரும் குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தின் ஊடாக நிரூபித்துக் காட்டுமாறு முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் அத்துரலிய ரத்ன தேரரிடம் சவால் விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவிற்குச் சென்று வாக்குமூலம் ஒன்றை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த விசாரணைகளுக்கு ஒருபோதும் இடையூறு விளைவிக்கவில்லை என்றும் தாம் உள்ளிட்ட முஸ்லிம் அமைச்சர்கள் எந்தவொரு குற்றமும் இழைக்கவில்லை என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் அறிந்து வைத்திருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், "எனக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஊடகங்களிலும் பிரசாரங்கள் வெளியாகி இருந்தன.

அவற்றிற்கு எதிராக முறையிட்டிருந்த நிலையில் அது குறித்த மேலதிகத் தகவல்களை பெற்றுக் கொள்ளவே இன்று அழைக்கப் பட்டிருந்தேன்.

ஊடகங்களில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குப் பின்னர் பொய்யான குற்றச்சாட்டுக்கள் எனக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தன.

சதொச வாகனங்கள் பயன்பாடு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் குறித்து முறையிட்டிருந்தேன்.

அன்றைய தினம் பொலிஸ்மா அதிபரிடமும் முறையிட்டிருந்தேன். எந்தவொரு பிழையும் நான் செய்யவில்லை. உண்மை வெல்லும்.

எனக்கு எதிராக முறைப்பாடு செய்து வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தின் ஊடாக அதனை நிரூபித்துக் காண்பிக்குமாறு ரத்ன தேரருக்கு நான் கூறுகின்றேன்.

வில்பத்து வனவிவகாரத்தில் ரத்ன தேரர் பல வருடங்களாக இதனை கூறி வருகின்றார்.

ரத்ன தேரர் அன்று உண்ணாவிரதம் இருந்தபோது இன்னுமொரு தேரர் அங்கு சென்று முழு நாடுமே தீப்பற்றி எரியப் போகிறது என்று எச்சரித்ததை அடுத்து நாடு அழிவுப்பாதைக்கு செல்லாமல் நாட்டின் நற்பெயர் பாதிக்கப்படாமல் சுற்றுலாத் துறையை கருத்திற்கொண்டு மற்றும் இனங்களிடையே ஐக்கியத்தை நினைத்துத்தான் நாங்கள் இராஜினாமா செய்தோம்.

எமக்கு அமைச்சுப் பதவிகள் பெரிதல்ல. ஜனாதிபதியும் பிரதம ரும் மீண்டும் பதவிகளை ஏற்கும் படி கூறினார்கள். ஆனாலும் ஜனாதிபதியும் பிரதமரும் முழு நாடுமே நாங்கள் குற்றம் செய்ய வில்லை என்பதை அறிவார்கள் என மேலும் தெரிவித்தார். (7)

# உலகின் சிறந்த நாடுகள் பட்டியலில் மீண்டும் முதலிடம் பிடித்த இலங்கை!

(கொழும்பு)

உலகின் மிகச் சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை மீண்டும் முதலிடம் பிடித்துள்ளதாக உலக புகழ் பெற்ற லோன்லி ப்லெனட் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் இந்த வருடத்தில் சுற்றுலா பயணம் மேற்கொள்வதற்கு உலகின் மிகச் சிறந்த நாடுகளில் இலங்கை மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது.

உலகின் மிக சிறந்த சுற்றுலா வழிகாட்டி புத்தகமாகக் கருதப்படும் லோன்லி ப்லெனட் சஞ்சிகை, கடந்த வருடம் 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த சுற்றுலாத் தளமாக இலங்கை அறிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதித் தாக்குதலின் பின்னர் இலங்கை இந்த பட்டியலில் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. எனினும் மீண்டும் இலங்கை இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளதாக லோன்லி ப்லெனட் தெரிவித்துள்ளது.

இந்த பட்டியலில் இரண்டாம் இடத்தில் ஜேர்மனுக்கும் மூன்றாம் இடம் சிம்பாவேயிற்கும் கிடைத்துள்ளது. (7)

# பலாலி விமான நிலையப் பணிகள் நாளை மறுதினம் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின் மூன்றாவது அனைத்துலக விமான நிலையமான, பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

19.5 பில்லியன் ரூபா செலவில் பிராந்திய விமான சேவைகளை நடத்தக் கூடிய வகையில் பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் பலாலி விமான நிலையத்தில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

இரண்டு கட்டங்களாக பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஓடுபாதை விரிவாக்கம் மற்றும் தொடர்புடைய வசதிகளை மேற்கொள்வது முதலாவது கட்டப் பணிகளாக முன்னெடுக்கப்படும். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனித இயல்புகள்

இந்த உலகத்திலே அது அதுக்கென்று ஒரு குணம் இருக்கு. ஒரு நாயின் குணம் என்னவென்று நமக்குத் தெரியும். ஒரு குரங்கு என்ன செய்யும் என்று நமக்குத் தெரியும். ஆனால் ஒரு மனிதனுடைய குணம் என்ன என்பதை நாம் சரியாகச் சொல்லி விட முடியாது.இவன் சில நேரம் நாய் மாதிரி இருப்பான். சில நேரம் குரங்கு மாதிரி நடந்து கொள்வான். எந்த நேரத்தில எந்தக் குணத்தில இருப்பான் எண்டு கண்டு பிடிக்கிறது கஷ்டம். பேச்சுக் கொடுத்துப் பார்த்தால்தான் தெரியும்.

அதுசரி! மனிதன் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான். ஒரு புராணக் கதையை கேட்டீங்கள் என்றால் அதன் பின்பு இப்படி கேள்வியெல்லாம் கேட்க மாட்டீர்கள்.

ஆண்டவன் என்ன செய்தாராம். ஜீவராசிகளை எல்லாம் படைத்ததற்குப் பின்பு அதற்கு ஆயுள்காலம் என்ன என்பதை முடிவு செய்ய வேண்டியிருந்ததாம். "எல்லா ஜீவராசிகளையும் சமமாகத்தான் உண்டாக்கியிருக் கின்றோம். ஒவ்வொன்றுக்கும் வயசு வித்தியாசம் என்னத்துக்கு! எல்லாம் ஒரே மாதிரி இருந்திட்டுப் போகட்டுமே" என்று நினைத்தார். அதனாலே எல்லாத்துக்கும் சராசரி 30 வருட ஆயுள்காலம் என்று முடிவு செய்தார்.

இதைக் கேள்விப்பட்டவுடனே ஒரு நாலு விதமான ஜீவராசிகளுக்கு மட்டும் இதிலே திருப்தி ஏற்படவில்லை. கழுதை, நாய், குரங்கு, மனிதன் இந்த நான்கும் பகவானிடம் முறையிட விரும்பினார்கள். அதுக்கு ஒரு சட்டத்தரணி தேவைப்பட்டது. வேற யாரு? நேரா நாரதரிடம் போனார்கள். அவர் இவர்கள் முறைப்பாட்டை எடுத்துக்கொண்டார். இவர்களை கடவுளிடம் அழைத்துக் கொண்டு போய் நிறுத்தினார். இவையெல்லாம் ஒவ்வொன்றாய் முறையிட ஆரம்பித்தன. முதலில் கழுதை முன்பு வந்து நின்றது.

"இதோ பாருங்க கடவுளே! நானோ நாள் பூராகவும் பொதி சுமந்து காலம் தள்ளப் போறேன். மிகவும் கஷ்டப்பட்டு பொதி சுமக்கிற எனக்கு 30 வருட ஆயுள் என்பது மிகவும் அதிகம். நினைத்தாலே மிகவும் பயமாக இருக்கிறது. கொஞ்சம் குறைத்து விட்டா பரவாயில்லை" என்றது.

பகவான் பார்த்தார் "நீ சொல்லுறது நியாயம் தான்" என்றார். அதோட ஆயுளையும் 18 வருடமாகக் குறைத்துவிட்டார். அடுத்தபடியாக நாய் வந்து நின்றது."சாமி என்னுடைய பிழைப்பே நாய் பிழைப்பு. எனக்கு என்னத் துக்கு 30 வருடம். அவ்வளவு நாள் நான் கஷ்டப்பட வேண் டுமோ?" என்றது. அதுவும் சரிதான் என்று நினைத்தார் கடவுள்.

"சரி உன்னுடைய ஆயுளை 12 வருடமாகக் குறைத்து விடுகிறேன்"என்று சொல்லிவிட்டார். நாய் சந்தோசமாக வாலை ஆட்டிக் கொண்டே அங்கே இருந்து நகர்ந்து போய்விட்டது. அடுத்தபடியாக குரங்கு வந்து நின்றது.

"சாமி! என்னுடைய சேட்டைகள் எப்படி என்பது உங்களுக்கே நல்லாப் புரியும். எப்ப பார்த்தாலும் மரத்திலேயும் கிளையிலேயும் தொங்கிக்கொண்டிருக்கப் போறேன்...எனக்கு என்னத்துக்கு முப்பது வருடம்" என்றது. சாமி பார்த்தார் சரியென்று அதையும் பத்து வருடமாகக் குறைத்து விட்டார். குரங்குக்கு மிகவும் சந்தோசம். ஒரே தாவா தாவி அங்கேயிருந்து வந்துவிட்டது.கடைசியாக மனிதன் கடவுள் முன்னால் போய் நின்றான்.

"ஈஸ்வரா! எனக்கு 30 வருடம் பத்தாது! நான் இந்த உலகத்திலே நிறையச் சாப்பிட வேண்டியிருக்கு, நிறைய தூங்க வேண்டியிருக்கு, நிறைய அனுபவிக்க வேண்டியிருக்கு. அதனாலே என்னுடைய ஆயுளை கொஞ்சம் அதிகப்படுத்தினால் நல்லது என்றான்.

கடவுள் யோசித்தார். ஆயுளை அதிகப்படுத்திறதென்றால் அதிலே சில பிரச்சினைகள் இருக்கே. பூமியிலே இடப் பிரச்சினையெல்லாம் வரும் என்று கொஞ்சம் தயங்கினார். அதைப்பார்த்தவுடனே மனிதனே அதற்கு ஒரு வழியையும் சொன்னான்.

"எதுக்காக யோசிக்கிறீர்கள்? கழுதையிலே குறைத்த 12, நாயிலே குறைத்த 18, குரங்கிலே குறைத்த 20 வருடம். இவை எல்லாத்தையும் சேர்த்து என்னிடம் கொடுத்திட்டீர்கள் என்றால் போதும். உங்களுக்கும் கணக்கு உதைக்காது" என்றான்.

"தனுடைய பலன் என்ன என்பது இப்பதான் புரிகிறது. ஏற்கனவே அப்படி முடிவானதாலேதான் இன்றைக்கு மனிதன் 30 வருடம் வரைக்கும் சந்தோசமாக இருக்கிறான். இது அவனுக்கென்று விதிக்கப்பட்ட ஆயுள். அடுத்த 12 வருடம் கழுதையிடம் வாங்கியது. அதுதான் கழுதை மாதிரி குடும்பப் பாரத்தை சுமக்கிறான்.அடுத்த 18 வருடம் நாயிடம் வாங்கியது. அதுதான் அந்தச் சமயத்திலே சொத்துச் சேர்க்கிறதுக்காக, இல்லையென்றால் சேர்த்த சொத்தை காப்பாற்றுவதற்காக நாய் மாதிரி அலையிறான். இல்லையென் றால் காவல் காக்கிறான். அடுத்த 20 வருடம் குரங்கிடம் வாங்கினது. வயதாகி, மரியாதை போய்...யார் என்ன சொன்னாலும் அவர்கள் சொல்லுறபடி ஆட வேண்டிய நிலைமை.

அன்றைக்கு வாங்கின "ஆயுள் கடன்" இன்றைக்கு ஆயுள் பூரா மனிதனை என்ன பாடு படுத்திக்கிட்டிருக்குப் பார்த்தீர்களா?

ஒரு வாரத்துக்கு முன்பு என் நண்பர் ஒருத்தரை ஒரு இடத்திலே பார்த்தேன். "என்ன சேர் கொஞ்ச நாளா அலுவலகப் பக்கமே உங்களைப் பார்க்க முடியலை" என்றேன். அவர் கொஞ்சம் எரிச்சலோடு என்னை முறைத்துப் பார்த்திட்டுச் சொன்னார்,


"வீடு ஒன்று கட்டவேண்டும் என்று ஆரம்பித்தேன். அதற்காக நாய் மாதிரி அலைஞ்சு கொண்டு இருக்கிறேன். பின்பு எப்படி அலுவலகத்துக்கு வாறது" என்று சொல்லி விட்டு வேகமாக ஓடினார். இதுக்கு என்ன அர்த்தம்! அவர் அந்த மூன்றாவது ஸ்டேஸ்லே இருக்கிறார் என்று அர்த்தம்.

# தூக்குத்தண்டனை தவறான முன்னுதாரணம்

## முன்னாள் சபாநாயகர் சமல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பௌத்த நாடான இலங்கையில் தூக்குத் தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது தவறான முன்னுதாரணம் என முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.**



கொலன்ன மடுவன்வல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நூல் வெளியிட்டு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தூக்குத் தண்டனையை பண்டாரநாயக்கவே இல்லாமல் ஆக்கினார். பண்டாரநாயக்க கொல்லப்பட்ட போது, மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்த அனுமதி கோரிய போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர் அதனை எதிர்த்தனர். இதனால், மீண்டும் தூக்குத் தண்டனையை அமுல்படுத்த இடமளிக்கப் போவதில்லை என சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கோரிக்கை விடுத்தால், போட்டியிடுவீர்களா என செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அது கட்சி மற்றும் மக்களின் விருப்பத்திற்கு அமைய நடைபெறும் எனப் பதிலளித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது அறிவிக்கப்படும் எனவும் சமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (7)

# ஸ்ரீலங்கன்- மிஹின் லங்கா ஊழல்கள் தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின் லங்கா விமான நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.



ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் அனில் குணரத்னவால் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2018 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் விமான நிறுவனம், ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம், மிஹின் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றில் இடம் பெற்றதாக கூறப்படும் ஊழல், மோசடிகளை கண்டறிவதற்காக இந்த ஆணைக்குழு 2018 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஆஸ்திரியாவுக்கான இலங். தூதுவர் கடமைகளைப் பொறுப்பேற்பு



(கொழும்பு)

ஆஸ்திரியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்றுள்ள சரோஜா சிறிசேன நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அவர், ஆஸ்திரியாவுடனான அரசியல் மற்றும் பொருளாதாரத் தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துவதன் ஊடாக ஆஸ்திரிய - இலங்கை நாடுகளுக்கு இடையிலான நெருக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அத்தோடு ஆஸ்திரியாவின் ஒத்துழைப்புடன் இலங்கையில் சுற்றுலாத்துறையை மீண்டும் வலுப்படுத்துவது குறித்தும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

தூதுவர் சரோஜா சிறிசேன கடந்த 1998 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிவிவகார சேவையில் இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் பொருளாதார விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமாகவும் வெளிவிவகார அமைச்சின் ஊடகப்பேச்சாளராகவும் பதவி வகித்ததுடன், மேலும் பல இராஜதந்திரப் பதவிகளை அவர் வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)




### நாளைய வாழ்வு இனிமையுற

ஆலய மணி ஒலி காதில் விழ
அடியார் உள்ளம் மகிழ்வு பெற
நாளைய வாழ்வு இனிமையுற
நாயகி உமையே நம்பிவர
கோவில் நாடிக் கூடிடுவோம்- நயினைத்
தாயிடம் எம் குறை கூறிடுவோம்- தமிழ்
பாவினால் மனமுருகிப் பாடிடுவோம்
பணிந் தென்றும் தாயிடம் அன்பு கொள்வோம்

**சின்னப்பு தனபாலசிங்கம்**
**முருகன் கோவிலடி, புலோலியூர்**

### எழிலீயும் ஏந்திழையே!

அலை கடலின் நடுவினிலே
ஆழத் தடம் பதித்து
நிலையாக நின் றொளிரும்
நீ ளுலகின் நித்திலமே!
சிலையாக நின் றென்றும்
சீர்த்திதமை யீந் துலகை
மலையாகக் காத்திடம்மா!
மாட்சிதமை யீந் திடம்மா!

ஏற்ற மிறக்க மின்றி
எழி லீயும் ஏந்திழையே!
மாற்றுக் கருத் ததற்கு
மாத வத்தி லிடமின்றி
கூற் றுவராய் நிற்பவரை
குணமாக்கி வழி சமைத்து
சீற்றம் சிதைத் துலகை(ச்)
சிறப்புறவே வாழ வைப்பாய்!

**கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்**

### நாகதோஷம் நிவர்த்திசெய்யும் நாகபூஷணித் தாயே

அலைகடலின் மீது
அறுபத்து நான்கு சக்தி பீடங்களில்
ஒன்றாக வீற்றிருக்கும் பெருமை
உனக்குண்டோ நாகம்மாவே!
பிள்ளையில்லாப் பேறும், இனியதொரு
வாழ்வும் கிடைக்க
வேற்று நாட்டிலிருந்து
வந்து- உன் சந்நிதியில்
நாகபூஜை செய்தேனம்மா
நாகபூஷணியே என் குறையை
தீர்த்து வை சீக்கிரமே...

**வி.காயத்திரி, மடத்தடி, சாவகச்சேரி.**

### வாழ்வளிப்பாய் அன்னையே

நயினையம் பதியில் உறைபவளே
நாகபூஷணித்தாயே... நலங்கள் தருபவளே
நம்பினோர்க் கபயம் அளிப்பவளே..
நல்லவரங்கள் ஈய்ந்து
நம்மைக் காப்பவளே
அகிலாண்டேஸ்வரியே அன்னை பராசக்தியே
அண்டங்களை ஆள்பவளும் நீயே
வன்முறைகள் ஓய்ந்து வக்கிரங்கள் ஒழிய
வடபுரத்தே வீற்றிருந்து வாழ்வளிப்பாய் அன்னையே


**க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.**

# மக்களின் குடியிருப்பு முறையில் ஏற்பட்ட மாற்றமும் குடியிருப்பு நிர்மாணிக்க அனுமதி பெறும் முறையும்

04

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





தோட்ட மக்களின் லயன் அறைகள் (Line rooms)



தோட்ட மக்களுக்கான புதிய வீடுகள்

* **கட்டடம் நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கும் நிறுவனங்கள்**

**கட்டட அனுமதி என்பது கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கு உரிய அதிகாரம் பெற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் இசைவுச் சான்றிதழ் ஆகும். பொதுவாகக் கட்டடம் அமையவுள்ள பகுதியை நிர்வகிக்கும் உரிமையுள்ள உள்ளூராட்சிச் சபைகளே இவ்வாறான அதிகாரங்களைக் கொண்டுள்ளன.**

பொதுவாகக் கட்டடம் அமையவுள்ள பகுதியை நிர்வகிக்கும் உரிமையுள்ள உள்ளூராட்சிச் சபைகளே இவ்வாறான அதிகாரங்களைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் போன்றவை கட்டட அனுமதி வழங்கும் உரிமைகளைக் கொண்டிருக்கின்றன.

இவை தவிர சில சந்தர்ப்பங்களில், அப்பகுதிகளின் நகர வளர்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய நிறுவனங்களோ, துறைமுகப் பகுதிகள், சுதந்திர வர்த்தக வலயங்கள் போன்ற இடங்களில் அவற்றை நிர்வாகம் செய்கின்ற நிறுவனங்களோ இந்த உரிமையைக் கொண்டிருப்பதும் உண்டு.


### கட்டட விதிமுறைகள்

கட்டட அனுமதி பெற விண்ணப்பிப்பவர்கள் கட்டடத்தின் பயன்பாடு, அதன் உயரம், மொத்தத் தளப்பரப்பு, காற்றோட்டம், தீத்தடுப்பு ஒழுங்குகள் போன்ற பல அம்சங்கள் தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை அளவிற் பெரியவையும், கூடிய அதிகாரங்களைக் கொண்டவையுமான நிறுவனங்கள் உருவாக்கி வைத்துள்ளன. இவை கட்டட விதிமுறைகள் எனப்படுகின்றன.

இவ் விதி முறைகளின் பலவிடயங்கள் கட்டப் படங்களில் காட்டப்படும். இவை தவிர அனுமதிக்கு விண்ணப்பிக்கும் முறை, விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய ஆவணங்கள் போன்ற விடயங்கள் தொடர்பிலும் விதிகள் உள்ளன.


கட்டட அனுமதிக்கான இறுதி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படு முன்னர் நகரத் திட்டமிடல் நிறுவனம், மின் விநியோக நிறுவனம், வடிகால் அமைப்பு நிறுவனம் போன்ற பல நிறுவனங்களிடமிருந்து குறித்த கட்டடம் கட்டுவது தொடர்பான இணக்கப்பாட்டுச் சான்றிதழ்களும், அவ்வச் சேவைகள் தொடர்பான வடிவமைப்புக்கான அங்கீகாரமும் பெறப்படவேண்டும்.

**கட்டடம் கட்டுவதற்கான காணித்துண்டின் அளவு (Plot size)**




நில தளக்கட்டடமோ அல்லது நிலத் தளத்தில் இருந்து 3ஆம் மாடி வரை ஒரு பொதுத் தேவைக்கான கட்டடம் கட்டுவதாயின் காணியின் பரப்பளவு குறைந்தது 12 பேர்ச் ஆக இருத்தல் வேண்டும்.

**கட்டடம் கட்டுவதற்கான காணித்துண்டின் அளவு (Plot size)**




நில தளக்கட்டடமோ அல்லது நிலத் தளத்தில் இருந்து 3ஆம் மாடி வரை ஒரு பொதுத் தேவை அல்லாத கட்டடம் கட்டுவதாயின் காணியின் பரப்பளவு குறைந்தது 6 பேர்ச் ஆக இருத்தல் வேண்டும்.

மூன்று மாடிகளுக்கு மேல் கட்டுவதாயின் காணியின் பரப்பளவு குறைந்தது 40பேர்ச் ஆக இருத்தல் வேண்டும்.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

ஆனால் 1977 ஆம் ஆண்டுத் தமிழின அழிப்பும் 1983 இல் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட நன்கு திட்டமிடப்பட்ட தமிழின அழிப்பு நடவடிக்கையும் தமிழ் அரசியல் தலைவர்களையும் தமிழ் மக்களையும் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தையிட்டுத் தீவிரமாகச் சிந்திக்க வைத்தன.

1970களிலிருந்து தமிழ்த் தேசத்தை சிங்களப் பேரினவாத அரசிடமிருந்து காப்பாற்றி தமிழ்த் தேசத்தின் சுதந்திரத்தையும் அதன் நிரந்தரமான பாதுகாப்பையும் உறுதிப்படுத்தப் பல போராளிகள் பல்வேறு குழுக்களாக ஆரம்பத்தில் தோற்றம் பெற்றனர்.


290

வேலுப்பிள்ளை பிரபாகரன்

அவர்களுள் பிரதானமாக தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர முன்னணி, ஈழ மாணவர் புரட்சி அமைப்பு என்பன காணப்பட்டன.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் யாவுமே தமது இறுதி இலட்சியமாக தமிழ்த் தேச விடுதலையையும் அதன் சுதந்திரத்தையுமே வரித்திருந்தன. இவற்றில் சில இயக்கங்கள் மறைந்துவிட்டன.

சில இயக்கங்கள் தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டுள்ளன. மேற்படி இயக்கங்களில் அங்கம் வகித்த பலர் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தையும் தமிழ்த் தேசத்தின் சுதந்திரத்தையும் தமது இறுதி இலட்சியமாகக் கொண்டு தாம்கொண்ட கொள்கையிலிருந்து ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மாறாது போராடினர்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முக்கிய உறுப்பினரும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதான உறுப்பினராகவும் நீண்டகாலம் தமிழ்மக்களின் உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் சிறந்த அரசியல் ஞானமும் பேச்சு வன்மையும் மொழியாற்றலும் கொண்ட தமிழ்மக்களின் மனங்களை ஆகர்ஷித்த தலைவருமான மு.சிவசிதம்பரத்தை இந்தியாவில் (சென்னையில்) சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு 20 சித்திரை 2000 ஆம் ஆண்டில் கிடைத்தது.

சென்னைப் பல்கலைக்கழக தெற்காசியத் துறைத் தலைவரான பேராசிரியர் சூரிய நாராயணனும் இச்சந்தர்ப்பத்தில் இந்நூலாசிரியருடன் கூட இருந்தார். முதுமையடைந்திருந்தபோதும் அரசியல் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் ஆராயக்கூடிய நிலையில் சிவசிதம்பரம் இருந்தார்.

தமிழர் நிலை குறித்துக் கலந்துரையாடப்பட்ட இச்சந்தர்ப்பத்தில் நூலாசிரியர் சிவசிதம்பரம் இரண்டு வினாக்களைக் கேட்டார். அதாவது முதலாவது வினாவாக,

நீங்கள் நீண்டகாலம் தமிழர் அரசியலில் ஈடுபட்டவர். உங்களுக்கு நிறைய அனுபவம் உண்டு. அண்மையில் நீங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் மிகக் குறைந்த வசதிகளுடன் வசிக்கின்றீர்கள்.

எனவே தங்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் குறிப்பாக அதன் தலைவர் பிரகாபரன் மீதும் ஆத்திரமும் வெறுப்பும் ஏற்பட்டிருக்குமல்லவா? என்றும் அடுத்த வினாவாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் இலட்சியம் வெற்றிபெறும் என நீங்கள் எண்ணுகிறீர்களா? என்றும் கேட்டார்.

சிவசிதம்பரம் சற்று அமைதியாக இருந்துவிட்டு கண்கள் நீரில் குளமான நிலையில் மிக அமைதியாக தமிழ்மக்களுக்கு இப்பதான் ஒரு நல்ல தலைமைத்துவம் கிடைத்திருக்கின்றது. அது யாரிடமும் எக்காரணம் கொண்டும் விலைபோகாத தலைமைத்துவம்.

அவர் மேலும் சற்று அமைதியாக இருந்துவிட்டு சற்றுக் குரலை உயர்த்தி நான் இந்த உலகில் யாருக்கும் இதுவரை தலைதாழ்த்தவில்லை.

But I'm prepared to take off my hat to Pirabakaran! என்று சொல்லி முடித்துவிட்டு மீண்டும் அமைதியானார்.

நூலாசிரியர் மிகவும் பணிவாக ஒரு வேண்டுகோளை அவரிடம் விடுத்தார். நீங்கள் கூறிய விடயத்தை செய்தியாக வெளியிட அனுமதி தருவீர்களா? அதற்கு அவர், இச்செய்தியை நீங்கள் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே சொல்லுங்கள் எனச் சற்று உரத்த குரலிலே கூறினார் தலைவர் சிவசிதம்பரம்.

இந்த அத்தியாயத்தை நிறைவு செய்வதற்கு பேராசிரியர் ஜேம்ஸ் ஜி.கெலாஸ் தேசியவாதத்தையிட்டு ஒரு கலந்துரையாடலின் போது கூறியதை இங்கே தருவது பொருத்தமானதாகும்.

ஒரு தேசம் என்பது வரலாறு, கலாசாரம், பொது வம்சாவழி என்ற பந்தங்களினால் இணைக்கப்பட்ட ஒரு இனமாக தம்மையிட்டு உணரும் ஒரு மக்கள் தொகுதியாகும். தேசங்கள் ஒரு ஆட்சியுரிமைப் பிரதேசம், ஒரு மொழி, ஒருமதம், பொது வம்சாவழி (எப்போதுமே இவையாவும் இருக்காத போதிலும்) என்பனவற்றையும் உள்ளடக்கக்கூடிய புறவய இலக்கணங்களையும் அகவய இலட்சணங்களான அவற்றிலும் அதிமுக்கியமான தமது தேசியம் பற்றிய மக்களின் பற்றையும் பிரக்ஞையையும் கொண்டவையாகும்.


இறுதியாக அது தம் நாட்டுக்காகத் தம்முயிரையும் போக்கத் தயாராகவுள்ள மக்களின் அதியுயர்ந்த விசுவாசமாகும். உலகத்தின் மிகச் சக்திவாய்ந்த போராளித் தலைவருள் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டுள்ள வே. பிரபாகரனின் தலைமையின் கீழான விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து நிற்கும் தம் நாட்டுக்காகத் தம்முயிரையும் போக்கத் தயாராகவுள்ள அதியுயர் விசுவாசம் கொண்ட இளம் தமிழரின் உச்ச விசுவாசமே தமிழ்த் தேசியவாதத்தின் தற்போதைய படிநிலையாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையைக் குறித்தானதொரு ஆழமானதும் புறவயப்பட்டதுமான ஆய்வு முயற்சியில் அறிஞர்கள் ஈடுபடுவதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

(முற்றும்)

# ரணில்- கரு ஆசீர்வாதத்துடன் ஜனாதிபதி வேட்பாளராக சஜித்

## மங்கள சமரவீர தெரிவிப்பு



அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை நிறுத்த வேண்டும் என நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியினால் வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். குறித்த வேட்பாளர் வெற்றி பெறுபவராக இருத்தல் வேண்டும் என்ற கருத்துக்கள் கட்சிக்குள் காணப்படுகின்றன.

இந்நிலையில் கட்சியினுள் அத்தகைய அம்சங்களை கொண்ட ஒரே நபராக சஜித் பிரேமதாச காணப்படுகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் சபாநாயகர் கரு



ஜெயசூரிய என கட்சியின் அனைத்து உறுப்பினர்களின் ஆசீர்வாதத்துடன் சஜித்தை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என முன்மொழிவதாக அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (7)

# நாவலப்பிட்டியில் விபத்து 8 மாணவர்கள் உட்பட 9 பேர் காயம்

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி- ஹப்புகஸ்தலாவ பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் 8 மாணவர்கள் உட்பட 9 பேர் படுகாயமடைந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹப்புகஸ்தலாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாணவர்களை ஏற்றிச் சென்ற ஆட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து விபத்தில் படுகாயமடைந்த ஆட்டோச் சாரதி



உட்பட 9 பேரும் நாவலப்பிட்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இதில் ஒரு மாணவன் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (7)

# சோபாவின் தாக்கங்கள் குறித்து ஆராய இரு குழுக்கள் மகிந்தவால் நியமனம்

(கொழும்பு)

அமெரிக்காவுடன் செய்து கொள்ளத் திட்டமிட்டுள்ள சோபா உடன்பாட்டின் உள்ளடக்கம் குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, இரண்டு குழுக்களை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

சோபா உடன்பாட்டினால், அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக நாட்டுக்கு ஏற்படக் கூடிய தாக்கங்கள் குறித்து ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.



பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான இந்த குழுவில், வெளிநாட்டு உறவுகள் மற்றும் கொள்கைசார் நிபுணர்கள் நால்வர் இடம்பெற்றுள்ளனர்.

இரண்டாவது குழுவில் மூன்று அதிபர் சட்டவாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழு, சோபா உடன்பாட்டினால், நாட்டின் சட்டத் துறையில் ஏற்படக் கூடிய தாக்கங்களை ஆய்வு செய்து, அறிக்கை ஒன்றை தயாரிக்கவுள்ளது.

ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவும் இந்த இரண்டு குழுக்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. (7)

# முன்னாள் ஜனாதிபதிக்கு உயரிய விருது



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமா ரதுங்கவுக்கு 2019 ஆம் ஆண்டுக்கான Common ground award என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னெடுத்த பணிகளுக்காகவே இந்த விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1766

## பிரபா

சாப்பிடுவதற்குத் தேவையான பொருட்கள்... தட்டு... டம்ளர்... கரண்டி மற்றும் டிவி ரிமோட்



## சதீஷ்

மெழுகுவர்த்தி என்னதான் ஒளி கொடுத்தாலும் அதனுடைய அடிப்பகுதி இருளாத்தான் இருக்கும். அதுபோலத்தான் சிலரோட வாழ்க்கையும் என்னதான் வெளியில சிரிச்சுப் பேசினாலும் அவங்க மனசுல இருக்கும் வலி அவங்களுக்குத்தான் தெரியும்



## தினேஷ்



கூடையில் பழங்கள் குறையவில்லை அதனால் உடம்பில் சக்தி குறைந்துவிட்டது இவரைப்போல் ஏழ்மையில் இருப்பவர்களிடம் பேரம் பேசாமல் பொருட்களை வாங்கி வாழ வையுங்கள்

## கவி

நமக்கு வரும் மனைவி வெள்ளையா இருக்கனும் என்பது முக்கியமில்லை.... கடைசி வரைக்கும் தொல்லையா இருக்கக் கூடாது. அதுதான் முக்கியம்



## ஆரோகி

மழை பெய்யும் போது ஓட்டு வீடு தரும் குளிர்ச்சியை எந்தவொரு ஏசி அறையாலும் கொடுத்துவிட முடியாது...!



## கண்ணா

ஹலோ... முதலாளி வெங்காய லோட இறக்கி வச்சுட்டேன்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சு.கவின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் மகிந்தவின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணையவும்

## அநுர பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கௌரவம் பாது காக்கப்பட வேண்டுமா யின் எதிர்க் கட்சித் தலை வர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்திலான அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சியினர் ஒன்றுபட வேண்டும் என அநுரபிரிய தர்ஷன யாப்பா தெரிவித் தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின ருக்கு எதிராக ஒருபோதும் சுதந்திரக் கட்சியினரால் தனித்து செயற்பட முடியாது என்றும் மரண தண்டனை விவகாரம் இன்று அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகின் றது. போதைப்பொருள் ஒழிப்பிற்கு மரண தண்டனையே தீர்வு என்று ஜனாதிபதியும் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரி வித்து பிரதமர் இம்மாதத்தை வெள்ளை ஜுலையாக குறிப்பிடு வதும் இரு தலைவர்களின் மத் தியில் உள்ள போட்டித் தன் மையை வெளிப்படுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கல ந்து கொண்டு கருத்துரைக்கை யில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# அரசாங்கத்தை பதவி விலகக்கோரி ஜே.வி.பியினர் பாரிய போராட்டம்



(கொழும்பு)

அரசாங்கத்தை பதவி வில கக் கோரி அழுத்தத்தைக் கொடு க்கும் மக்கள் விடுதலை முன் னணியின் எதிர்ப்பு ஆர்ப்பா ட்டமும் மக்கள் கூட்டமும் எம்பி லிப்பிட்டியவில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

நாட்டை நிலைகுலையச் செய்த மக்கள் பாதுகாப்பை பறி கொடுக்கின்ற அரசாங்கமே உடனடியாக பதவி விலகு என்று மக்கள் விடுதலை முன்னணி நாடு முழுவதும் ஏற்பாடு செய்துள்ள அரச எதிர்ப்பு பாத யாத்திரை மற்றும் கருத்தரங்கு என்பவற்றின் மற்றுமொரு ஏற்பாடாகவே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற் றது. (7)





கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாண வர்களுக்கான மாதிரிச் சந்தை நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் நடைபெற்றது. அதிபர் ப.தர்மபூபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிவலயக்கல்வி அலுவலக கணிதபாட ஆசிரிய ஆலோசகர் சிறிகணேசன், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன் முன்னாள் ஓய்வுநிலை அதிபர் ந.நவரட்ணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(சேருநுவர)

சேருநுவர, லிங்கபுரம் அம் மன் கோவிலுக்கு அருகிலுள்ள வயல்வெளியில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழ ந்துள்ளார்.

லிங்கபுரம் பகுதியைச் சேர்ந்த சித்திரவேல் பேரின் பராசா (வயது-54) என்பவரே நேற்று முன்தினமிரவு இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

தனது வயற்காணியிலி ருந்து குறித்த நபர் வந்து கொண்டிருக்கையில், அரு கிலுள்ள வயற்காணியில் பாது காப்பின்றிக் காணப்பட்ட மின் கம்பியில் அகப்பட்டு இவர் உயிரிழந்துள்ளார். (7)

# செய்தித்துளிகள்

## பள்ளத்தில் பாய்ந்த ஆட்டோ ; ஒருவர் பரிதாபமாகப் பலி



ஆட்டோ ஒன்று 50 அடி பள் ளத்தில் விழுந்து விபத்துக்குள் ளானதில் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

குறித்த விபத்து இரத்தினபுரி பலாங்கொடை வீதியின் பெர கெட்டிய சந்தியில் நேற்று முன் தினம் காலை சம்பவித்துள்ளது.

வேககட்டுப்பாட்டை இழந்த குறித்த ஆட்டோ 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக் குள்ளானதாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த விப த்தில் உயிரிழந்தவரின் சடலம் பலாங்கொடை வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த விபத்து தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (7)

## ரயில் மோதியதில் தாய், மகள் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி நேற்றுக் காலை சென்ற உடரட்ட மெனிக்கே ரயில் மோதியதில் தாய், மகள் படு காயங்களுக்குள்ளாகினர்.

இதேவேளை, படுகாயங் களுக்குள்ளான 27வயதுடைய தாயும் 07வயதுடைய சிறுமியும் நாவலப்பிட்டி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் படு காயங் களுக்கு ள்ளான தாயும் மகளும் கெட்ட புலா கடுங்சேன பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

இதையடுத்து குறித்த விபத்து தொடர்பில் மேலதிக விசார ணைகளை நாவலப்பிட்டி பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர். (7)

## பிரதேச சபை உறுப்பினர் கைது!

(நரமல்ல)

தாக்குதல் சம்பவம் தொடர் பாக நரமல்ல பிரதேச சபையின் உறுப்பினர் அருன நிஷாந் தவையும் அவரது உறவினர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று முன்தினம் பொலிஸ் நிலை யத்தில் சரணடைந்த நிலை யிலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 150 | 110 | 125 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 410 | 450 |
| தக்காளி | 80 | 60 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 140 | 110 | 100 |
| கோவா | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 160 | 120 | 120 | 160 |
| பூசணி | 150 | 100 | 150 | 120 |
| புடோல் | 60 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 100 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 150 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 130 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 60 | 100 |
| பயற்றங்காய் | 160 | 60 | 130 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 70 | 80 |
| பீற்றூட் | 100 | 70 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 120 | 120 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 140 | 210 | 200 |
| போஞ்சி | 160 | 120 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 80 |
| கீரை-1பிடி | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 220 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 100 | 150 |
| வெங்காயப்பூ | 240 | — | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 60 | 110 | 60 |



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் வேலைக்காரன்



ஓர் ஊரில் வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான். வணிகன் ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக் கொண்டு பனங்காட்டுக்குப் போ... அங்கே பலர் பனைமரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு இருப்பர். அதே போல் நீயும் மரங்களை வெட்டிக்கொண்டு வா!" என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு இருந்தனர். சிலர், கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"என்ன இவர்கள் எல்லாரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில் சரியாக விழும். வீணாக ஒரு முறை பூமியில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே!" என்று நினைத்தான்.

"என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி, நான் எத்தகைய அறிவாளி என்பதைப் புரிய வைப்பேன்" என்ற எண்ணத்தில், தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தை தேர்ந்தெடுத்தான்.

கோடரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள், "ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான்!" என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், "சடசட"வென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது. அவ்வளவுதான், வண்டி தூள் தூளானது. கால் உடைந்து குற்றுயிரும் குலை உயிருமாக மாடு துடித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்டு அவன் திகைத்து விட்டான். தன் திட்டத்தில் என்ன குறை என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

"என் திட்டம் நல்ல திட்டம் தான். வண்டிக்குத் தான் வலிமை இல்லாமல் போய்விட்டது" என்ற முடிவுடன் வீடு திரும்பினான். நடந்ததை அறிந்த வணிகன், முட்டாளாக இருக்கிறாயே! இப்படிச் செய்யலாமா? என்று வேலைக்காரனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்துவிட்டது.

"தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய இலாபம் கிடைக்கும்!" என்று நினைத்தான் வணிகன். உடனே வேலைக்காரனை அழைத்து, "கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக் கூடாது!" என்றான்.

வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன். ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

இப்போது அவன் உள்ளத்தில், "இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்றும் சொல்லவில்லையே!" என்ற சிந்தனை எழுந்தது.

"சரி, அவரையே கேட்டு விடுவோம்" என்ற எண்ணத்தில், நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான்.

"ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்துவிட்டேன். காலிப் பீப்பாய்களை என்ன செய்வது என்று கேட்டான். வணிகனுக்குச் சிறிது சிறிதாக உண்மை புலப்படத் தொடங்கியது.

ஐயோ, "மண்ணெண்ணெய் எல்லாம் போச்சே!" என்று அலறிய வணிகன், அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்.

## 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







●**கணவன்:** நெஞ்சு வலிக்குது டாக்டருக்கு போன் பண்றியா?

**மனைவி:** உங்க செல்போன் பாஸ்வேர்ட் சொல்லுங்க!

**கணவன்:** இப்ப பரவால்ல போன் பண்ண வேண்டாம்!.

●வாட்ஸ் அப் பாத்துட்டே எங்க ப்ளாட் தெரியாம!

கீழ் வீட்டில போய் உட்கார்ந்துட்டேன்!

அந்தம்மா சீரியல் பார்த்துட்டே டீ தந்துட்டு போவுது!.

●ஒரு மனுஷன் தனியா உட்கார்ந்து!

தன்னைத் தானே அடிச்சுக்கிறான்னா!

அங்க டெங்கு கொசு அதிகமா இருக்குன்னு அர்த்தம்!

## விடுகதைகளும் விடைகளும்

• தாய் சின்னக்கொடி, பிள்ளைகள் பெரியவர்கள். இது என்ன?

**பூசனிக்காய்**

• சோறுபோல பொங்க வைத்து, சுவரெல்லாம் பூசுவார்கள். அது என்ன?

**சுண்ணாம்பு**

• பறக்கும் வண்ணப்பட்டு, வாடும்மா மற்றவர்கள் கைபட்டு. அது என்ன?

**பட்டாம் பூச்சி**

• காற்றிலே பறக்குது கண்ணாடிக்கூண்டு, கையால் தொட்டால் காணாமல் போகுது. அது என்ன?

**சோப்புக் குமிழ்**

• ஒன்றாய் பிறந்து ஒரே வேலையை செய்யும் இரட்டையர்கள். அவர்கள் யார்?

**கண் பார்வை**

• இரவல் கிடைக்காதது, இரவில் கிடைக்கும். அது என்ன?

**தூக்கம்**

• இரவிலே பிறந்த ராஜகுமாரனுக்கு தலையிலே குடை. அது என்ன?

**காளான்**

• உச்சியில் தோகை, உள்ளங்காலில் ரோமம், உடலெல்லாம் வரிகள். அது என்ன?

**கரும்பு**

ஒருவரின் காலடியில் வாழ்வதை விட ..எழுந்து நின்று உயிரை விடுவது எவ்வளவோ மேல்

~ சே குவேரா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# போர்க்குற்றவாளிகளை பாதுகாப்பது யார்?

போர்க்குற்றவாளிகள் தேர்தலில் நின்றால் படுதோல்வி அடைவார்கள் என இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

போர்க்குற்றவாளிகள் என்று ரணில் விக்கிரமசிங்க யாரைக் குறிப்பிடுகிறார் என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

இப்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய விடயத்தில் ஒரு சட்ட விவகாரம் எழுகிறது.

அதாவது போர்க்குற்றவாளிகள் தேர்தலில் இறங்கினால், படுதோல்வியடைவார்கள் என்று பிரதமர் கூறியிருப்பதற்குள் போர்க்குற்றவாளிகள் யார் என்பது அவரால் இனங் காணப்பட்டுள்ளது.

எனவே போர்க்குற்றம் இழைத்தவர்கள் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்காதது ஏன்? கைது செய்து நீதிமன்றில் நிறுத்தி அவர்கள் இழைத்த போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்தாதது எதற்காக? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

போர்க்குற்றவாளிகள் எந்தவித விசாரணையும் விளக்கமுமின்றி சர்வசாதாரணமாக நடமாடுகின்றனர் என்பதுடன், தேர்தலில் இறங்கி ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றும் முயற்சியில் அந்தப் போர்க்குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளனர் என்பதும் தெரிகிறது.

போர்க்குற்றம் இழைத்தவர்கள் தண்டனை பெற வேண்டியவர்கள்.

தவிர, போர்க்குற்றம் இழைத்துவிட்டு தேர்தலில் போட்டியிடுவதென்பது அடிப்படையில் சட்டத்தை மீறுகின்ற செயலாகும்.

எனவே போர்க்குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிட்டால், படுதோல்வி காண்பார்கள் என்று பிரதமர் கூறுவதைவிட,

போர்க்குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று கூறுவதே பொருத்துடையதாகும்.

இதுவே ஒரு நாட்டின் பிரதமருக்கு அழகுடையதாகும்.

இதற்கு மேலாக, போர்க்குற்றவாளிகள் என்று தெரிந்தும் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்காமல் விடுவதானது போர்க்குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதாகும்.

இவ்வாறு போர்க்குற்றம் செய்தவர்களைத் தெரிந்திருந்தும் அந்த உண்மைகளை பொலிஸாருக்குத் தெரிவித்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தாவிடில், அது குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கு உதவியதான குற்றச்சாட்டுக்கு ஆளாகும்.

எனினும் இதுபற்றி நாம் இவ்விடத்தில் எழுதி ஆறுதலடையலாமேயன்றி, தமிழ் சட்ட வல்லுநர்கள் மூலம் நீதிமன்றுக்குச் சென்று பிரதமர் கூறிய போர்க்குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும் என மனுத் தாக்கல் செய்ய முடியுமா என்ன?

எதுஎவ்வாறாயினும் போர்க்குற்றம் இழைக்கப்பட்டது தமிழ் மக்களுக்கு என்பதால் போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்க சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் தயாரில்லை என்பதே உண்மை.

# வடமாகாண விவசாய திணைக்கள பிரச்சினை சம்பந்தப்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை

வடமாகாண விவசாய திணைக்களத்தில் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு கூட்டத்தின்போது ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளரை ஆளுநர் பணித்திருந்ததன் அடிப்படையில் அந்த அறிக்கை தற்போது ஆளுநருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள ஆளுநர் தீர்மானித்துள்ளார்.

குறிப்பிட்ட அந்த சம்பவத்தில் சிறுபான்மை இன பெண் அதிகாரியொருவர் தாக்கப்பட்டதனை வன்மையாக கண்டிப்பதுடன் இவ்வாறான சம்பவங்கள் இனி வடமாகாணத்தில் இடம்பெறாத வகையில் முன்னெடுக்கக் கூடியதான சகல நடவடிக்கைகளையும் மேற் கொளவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போராட்டங்கள் ஊர்வலங்களை மேற்கொண்டு தன்மீது எவரும் அழுத்தங்களை பிரயோக்கக முடியாது எனவும் பொது மக்களுக்கு சேவையினை வழங்கவேண்டிய அலுவலக நேரத்தில் அரச உத்தியோகத்தரகள் ஊர்வலங்கள்,ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென குறிப்பிட்டதுடன் அலுவலக நேரத்தில் முறையான விதிமுறைகளை கடைப்பிடிக்காது ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களில் ஈடுபடும் வடமாகாண நிர்வாகத்திற்குட்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9)

# 'வடமாகாண வட்டமேசை கலந்துரையாடல்'

வடமாகாணத்தை அபிவிருத்தி பாதையில் முன்கொண்டு செல்வதற்கு கல்வியியலாளர்கள் மற்றும் துறைசார் அனுபவஸ்தர்களின் திட்டங்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும்முகமாக ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் எண்ணக்கருவிற்கமைய "வடமாகாண வட்ட மேசை" கலந்துரையாடலின் ("Northern Province Round Table") முதலாவது கலந்துரையாடல்இன்று மாலை 4 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த வட்ட மேசை கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், "வடமாகாணத்தின் பொருளாதார எதிர்காலம்" தொடர்பில் உரையாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

மாதாந்தம் இடம்பெறவுள்ள இந்த "வடமாகாண வட்ட மேசை" கலந்துரையாடலில் ஆர்வமுள்ள எவரும் கலந்து கொள்ளமுடியும் என்பதுடன் இதில் கலந்துரையாட வேண்டிய தலைப்புக்கள் குறித்தும் அதன்போது தெரிவிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# ஆனமடுவில் வான்- லொறி விபத்து; யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவர் படுகாயம்

(ஆனமடுவ)

ஆனமடுவ- சிலாபம் வீதியின் பள்ளம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றது. வானொன்றும் லொறியொன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த ஐவரும் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கனடாவிலிருந்து வருகை தந்த தமது உறவினரொருவரை வரவேற்பதற்காக, யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி இவர்கள் பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் மாதகல், காஞ்சிபுரம, குசுமாந்துறை, காட்டுப்புலம், ஜம்புகோளப்பட்டி னம், ஜம்புகோளப்பட்டினம் வாடிவீடு, கோணாந்தோட்டம், ஆஸ்பத்திரிவீதி காரைநகர் வீதி சந்தியிலிருந்து கே.கே.எஸ்.வீதி சந்தி வரை, கொட்டடி, சீனிவாசகம் வீதி, முத்தமிழ் வீதி, சிவன் பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ் வீதி, துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச் சந்தி வரை, பிரதானவீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, சப்பல் வீதி, யாழ் 1 ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குத் தெருக்கள், வேம்படி வீதி சந்தி வரை, யாழ். பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், யாழ். பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், STS வைத்தியசாலை, அஞ்சல் திணைக்களம், தொழில் திணைக்களம் காரைநகர் சிவன் கோவிலடி, காரைநகர் கடற்கரை, இலகடி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி . பிரதேசத்தில கிளிநொச்சி நகரம், பரந்தன், இலங்கை வங்கி கிளிநொச்சி, மக்கள் வங்கி கிளிநொச்சி, ச.தொ.ச கிளிநொச்சி, விளையாட்டுத் தொகுதி கிளிநொச்சி, கிளிநொச்சி கச்சேரி, கிளிநொச்சி நீர்ப்பாசன சபை, பிறிந்தா உற்பத்தி நிலையம், கார்கில்ஸ் பூட் சிற்றி , கிளிநொசசி, சிவனருட்செல்வன் அரிசி ஆலை, பரந்தனிலிருந்து பூநகரி ஊடாக கௌதாரி முனை வரை, பரந்தன் பிரதேச செயலகம், அரசபுரம் முகாம், சுகந்தன் அரிசி ஆலை, விலா ஒடை முகாம, உமையாள்புரம், ஆனையிறவு, ஆனையிறவு உப்பளம், தட்டுவன்கோட்டை, இயக்கச்சி, இயக்கச்சி இரா ணுவமுகாம், North lanka agri food, கரந்தை, மல்வில், முகாவில், விநாயகபுரம், கோதாண்டாற்குளம், கோவிலவயல் ஆகிய இடங்களிலும் மனனார் பிரதேசத்தில் ஆணடான்குளத் திலிருந்து அடம்பன் வரை, ஆண்டான் குளத்திலிருந்து பள்ளிவாசல்பிட்டி வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## திருவாசக அரண்மனையில் 108 சங்காபிஷேகம்

நாவற்குழி திருவாசக அரணமனை ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு இன்று தொடக்கம் 10 நாட்களுக்கு தினமும் 108 சங்காபிஷேகம் நடைபெற்று எதிர்வரும் 13 ஆம் திகதி ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு விசேட கலச அபிஷேகம நடைபெறும். தொடர்ந்து 10 நாட்கள் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (5)

# மஹோற்சவம்

சுழிபுரம் பெரியபுலோ- அரசடி ஸ்ரீஞான வைரவஸ்சுவாமி தேவஸ்தான மஹா உற்சவம் நாளை 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரெண்டு நாட்கள் நடைபெறும்.இதில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மணவாளக் கோல உற்சவமும் 17 ஆம் திகதி புதன்கிழமை பெரும் பொங்கல் விழாவும் 19 ஆம் திகதி வெளளிக்கிழமை 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளன. (5-30)

# திறப்பு விழா

யா/கோப்பாய் கிறிஸ்த வக் கல்லூரியின் புதிய கட்ட டத் திறப்பு விழா இன்று 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அதிபர் ச.வேல ழகன் தலைமை யில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்வார். (5)

# பதவியை இராஜினாமா செய்த புகையிரதத் திணைக்கள முகாமையாளர்

(கொழும்பு)

புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தனது பதவியை இராஜி னாமா செய்து ள்ளார்.

அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் எல்பி ஜயம்பதியிடம்நேற்றைய தினம் கையளித்துள்ளார்.

.கடமை நேரத்தில் மது போதையில் இருந்ததற்காக பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட தொழிற்சங்க செயலாளரை மீண்டும் பணியில் அமர்த்து மாறு போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் கொடுத்த அழுத் தத்தின் காரணமாகவே இவர் பதவியிலிருந்து விலகியுள்ளதாக தகவல்களில் தெரியவந்துள்ளது. (7)

# சத்திய தரிசனம்

## இனிமையாகப் பேசுங்கள்



❖ நாக்கை அடக்கினால் நாம் ஞானியாக வாழலாம். அதனால் தான் விரதம் இருப்பதற்கும், நாள் முழுவதும்பேசாமல்மௌனம் காப்பதற்கும் பெரியவர்கள் நமக்கு வழிகாட்டி இருக்கிறார்கள்.

❖ உண்ணும்உணவைப்பொறுத்தே ஒருவரின் எண்ண ஓட்டம் அமைகிறது. வேண்டாத தீய ஆசைகளுக்கும் உணவிற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

❖ நாக்கின் ருசி, பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதை பொறுத்துத் தான் வாழ்வு சிறக்கும். நாக்கை நெறிப்படுத்தினால் பிற நன்மைகள் தாமாகவே நம்மை வந்தடையும்.

❖ இஷ்டதெய்வம் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். அதன் நாமத்தை திரும்பத் திரும்ப உச்சரியுங்கள். அது நாவிற்கும், மனதிற்கும் இனிமை சேர்க்கும்.

❖ பேசுவதாக இருந்தால் அளவோடு பேசுங்கள். இனிமையாகவும், மற்றவர் மனம் புண்படாமலும் பேசப் பழகுங்கள். உங்களின் பேச்சு மற்றவருக்கு அமைதி தருவதாக அமையட்டும்.

# சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணியை வெற்றி கொண்டது ஏ.பி.அணி



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரிவு III இற்கான தொடரில் விக்ரோரியா அணியை வென்றது ஏ.பி அணி. சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் ஈ.பி அணிக்குமான இரண்டாவது ஒருநாள் போட்டி சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிறுக்கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஏ.பி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. 46.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 242 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஏ.பி. அணி சார்பாக ராகுலன் 73 ஓட்டங்களையும் உத்தமன் 59 ஓட்டங்களையும் கஜி 29 ஓட்டங்களையும் ஜனா 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் விஜயகுமார் 3, கிருஷாந் 2, பிரதீஸ் 2, செந்தூரன் 1, பிரஷாந் 1, தூயவன் 1 இலக்குகளை வீழ்த்தினார்கள்.

243 என்ற வெற்றி இலக்கை கொண்டு கழகம் இறங்கிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் 49.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்று போராடித் தோற்றது.

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக சிறப்பாக துடுப்பெடுத்தாடி செந்தூரன் 66 ஓட்டங்களையும் பிரதீஸ் 42 ஓட்டங்களையும் குகஷாந்தன் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் இன்பராஜ் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர் .

பந்துவீச்சில் யதுலன் 3, லிங்கம் 2, டிலு 2, விக்கெட்டுகளையும் கனா, உத்தமன் ஆகியோர் தல ஒரு விக்கெட்டுகளை கைப்பற்றினர். (க)

## பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பம்

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகளுக்கிடையிலான தடகள போட்டிகள் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணம் துரைப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆரம்ப நாள் நிகழ்வுகள் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் ஆரம்பமாவதுடன் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் கலந்து கொள்கின்றார்.

8 ஆம் திகதி நடைபெறும் இறுதி நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கலந்து கொள்ளவுள்ளார். (க)

# அபார சதமடித்த சஞ்ஜீவன் விக்ரோறியா அணிவெற்றி



கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது.

மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று விக்ரோறியாக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அவ் அணி 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 50 ஓவர்களில் 345 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் கோ.சஞ்ஜீவன் 112, நி.பத்மபிரியன் 75 ஓட்டங்களைக் குவித்தார். மூன்றாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாக சஞ்ஜீவன், பத்மபிரியன் இருவரும் இணைந்து 197 ஓட்டங்களைப் பெற்றமை சிறப்புக்குரியதாகும்.

346 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மகாஜனா கல்லூரி 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

விக்ரோறியாவின் பந்துவீச்சில் வேணுதாஸ் 3 விக்கெட்டுகளையும் சிந்துஜன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி அசத்தியுள்ளனர். விக்ரோறியாக் கல்லூரி இப்போட்டியில் 199 ஓட்டங்களால் மாகாண அணியை வெற்றிபெற்றது. (க)




**2019 இற்கான வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டி கடந்த 29,30 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி கராத்தே அணியினர் 5 தங்கம் உட்பட 11 பதக்கங்கள் பெற்றதோடு குமுக்காட்டா 1 ஆம் இடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தையும் குமித்தேயில் 3 ஆம் இடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தையும் பெற்று 2019 இற்கான தேசியப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.**



**கிளிநொச்சி கனகபுரம் றோயல் முன்பள்ளி சிறுவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் திறன் காண் விளையாட்டு விழா கனகரத்தினம் அருள்செல்வம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.** **(படங்கள்:-கிளி.குமார்)**

## மரண தண்டனை...

உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கும் தீர்மானத்தை ஜனாதிபதி உடனடியாக கைவிட வேண்டும் என வலியுறுத்தினர்.

சுமார் 250இற்கும் அதிகமானோர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், 14 வருடங்களுக்கு முன்னர் ஹெரோயின் கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட மிப்தாரின் மனைவி சல்காவும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## விளக்கமறியல்...

மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கைது செய்யப்பட்ட இருவரையும் ஜூலை 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-3)

## தூக்கை ரத்து...

ஒன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது. அரசாங்கத்தினால் இந்த யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட பிரேரணையாக இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட உள்ளது.

மரண தண்டனை அமுல்படுத்தப்படுவதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் எதிர்த்து வருவதனால் இந்த பிரேரணை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மரண தண்டனை அமுலாக்கத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இருக்கும் தரப்புக்கள் சிலவும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## புலனாய்வினர்...

தடுப்பு விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஹிஸ்புல்லாஹ் நேற்றைய தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகி வாக்கு மூலம் ஒன்றை வழங்கினார்.

அச்சுறுத்தல் சம்பவமொன்று தொடர்பில் ஹிஸ்புல்லாவிடம் விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில்ஏற்கெனவே ஹிஸ்புல்லாஹ்பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சாட்சியமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## திருமலையில்...

அதிரடிப்படையின் 13 உறுப்பினர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்சாவின் முன்னிலையில் நேற்று புதன்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பிரதிவாதிகளுக்கு எதிராக 15 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பிரதிவாதிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு போதுமானளவு சாட்சியங்கள் இல்லாதமையால் 13 உறுப்பினர்களையும் விடுதலை செய்வதாக நீதவான் அறிவித்தார்.

பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து காத்திருந்த 4 மாணவர்களும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றிருந்த மாணவர் ஒருவருமே 2006 ஆம் ஆண்டு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வங்கிக் கணக்...

55 மில்லியனுக் கும் அதிக பணம் வைப்பிலிடப்பட்டுள்ளமை தொடர பில், நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பில், நிதிக் குற்ற விசாரணைப் பிரி வினர் கொழும்பு பிரதான நீதவான் நீதி மன்றில் அறிக்கையிட்டுள்ளனர். (ம-3)

## உலகெங்கும்...

களிலிருந்து படங்கள் டவுன்லோட் செய்தல் மற்றும் குரல் பதிவு தரவிறக்கம் செய்தல் என்பன முற்றாக செயலிழந்துள்ளன.

இலங்கையிலுள்ள சமூக வலைத்தள பாவனையாளர்கள் இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்பட்டுள்ள கோளாறு விரைவில் சீர் செய்யப்படும் என சமூக வலைத்தள நிறுவனங்கள் அறிவித்துள்ளன. (ம-3)

## சஹ்ரானின்...

யில் சாய்ந்த மருது பகுதியில் இடம்பெற்றதாக கூறப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் மரணமடைந்தவர்களின் தகவல்களை உறுதிப்படுத்தி மரணச்சான்றிதழ் வழங்குவதற்கென மரண விசாரணைக்காகவே மேற்படி நபர்கள் அழைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரண விசாரணைக்காக அழைத்து வரப்பட்டவர்களில் சஹ்ரானின் தங்கையான நியாஸ் மதனியா மற்றும் அவரது கணவர் எம்.எம்.நியாஸ், உள்ளிட்டோர் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் குற்றப் புலனாய்வு வாகனம் மற்றும் சிறைச்சாலை பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர்.

மேலும் இவ்வாறு நேற்று ஆஜர்படுத்தப்பட்ட சஹ்ரானின் தங்கை உள்ளிட்ட உறவினர்கள் தொடர்பான விசாரணை யாவும் நீதவானின் சமாதான அறையில் மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது வேறுவேறாக சஹ்ரானின் தங்கை உள்ளிட்ட உறவினர்கள் ஆஜர்படுத்தப்பட்டு நீண்ட நேர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். அவரது வீட்டிற்கு அண்மையாக புதைத்து வைக்கப்பட்டிருந்த 20 இலட்சம் பணம் மீட்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து உயிர் தப்பிய சஹ்ரான் காசிமின் மனைவியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியா கடந்த புதன்கிழமை காலை கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மரணமடைந்தவர்களின் தகவல்களை உறுதிப்படுத்த அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து கடந்த தவணை அழைத்து வரப்பட்ட சஹ்ரானின் மனைவி இம்முறை கல்முனை நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவில்லை.

எனினும் எவ்வாறான விசாரணை நீதிமன்றில் நடைபெற்றது என்பது தொடர்பான தகவல்களை ஊடகங்களுக்கு அறிவிக்க பதிவாளர் மறுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த மரண விசாரணை தொடர்பாக எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி புதன்கிழமை அன்று விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தமிழ் மக்களு...

கிளிநொச்சி மாற்று வலுவுள்ளோர் சங்கத்தில் நோர்வே சுன்மோர வாழ் மக்களின் நிதி உதவியுடன் நேற்று இடம்பெற்ற வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வின்பின் ஊடகவியலாளர்களுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வு கிடைக்காது விடின் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தி போராடுவது பற்றி சிந்திக்க வேண்டி வரும் என்ற சம்பந்தனின் கூற்று தமிழ் மக்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். நாங்கள் ஆயுதம் ஏந்தக் கூடிய ஒரு நிலையில் இல்லை. மூன்று மாதங்களுக்கு தீர்வுகள் கிடைக்காது விடின் ஆயுதம் ஏந்துவோம் எனக் கூறுவதில் எவ்விதமான பின்னணியும் இல்லை. இது பேச்சுக்காக பேசும் பேச்சு போலவே தெரிகிறது.

ஆயுதம் ஏந்த வேண்டிய சூழல் ஏற்பட்டு முப்பது வருடங்களாக ஆயுதம் ஏந்திய தாக்கம் இப்போதும் எங்களிடம் இருக்கிறது. எனவே இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கூறியிருக்கலாமே தவிர ஆயுதங்கள் எடுப்போம் என்ற பேச்சு, கூற்று மனவருத்தத்திற்குரியது என்பது என்னுடைய கருத்து.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் 2016 இல் இவ்வருட இறுதிக்குள் தீர்வு என்று கூறினார். அவ்வாறே 2017லும் 2018லும் கூறினார். இப்பொழுது எங்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறுகின்றார்.

ஆனால் நாங்கள் இதைதான் அப்பொழுது இருந்தே கூறி வந்தோம். அரசு எப்பொழுதும் மனமுவந்து தீர்வினை வழங்காது. அரசுக்கு நெருக்கடிகளை, அழுத்தங்களை கொடுத்தே தீர்வுகளை பெறவேண்டும். அல்லது அவர்கள் தங்களின் சுயநலன் கருதி தீர்வுகளை வழங்கலாம். இதனை விடுத்து அரசுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தீர்வினை தருவார்கள் என்று நம்புவது சிறுபிள்ளைதனமானது.

சம்பந்தனின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு தீர்வுகள் கிடைக்கக்கூடும் என்று சாத்திய கூறுகள் எதுவும் தென்படவில்லை. சம்பந்தன் நூறு வயது வரை இருந்தால் சில வேளை அவரது காலத்தில் தீர்வு கிடைக்க கூடும். ரணில் சில வேளைகளில் இந்த தேர்தல் காலங்களில் அரசியல் காரணங்களுக்காக ஏதேனும் தீர்வுகளை தரலாம் என கூட்டமைப்பு எதிர்பார்க்கிறது. அது நடக்குமா என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும் என்றார். (ம-3,312)

## கடையொன்றின்...

நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இந்நிலையில், சம்பவம் குறித்த விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## நாட்டில் நல்...

கப்பட்டுள்ள போதனை மண்டபத்தை மகா சங்கத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உடரட்ட அமரபுர சாசன ஜோதிகா சங்க சபைக்கு சொந்தமான இந்த இடத்தில் மூன்று மாடி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

நன்கொடையாளர்களின் நிதி மற்றும் இலங்கை இராணுவத்தினரின் மனிதவலு பங்களிப்புடன் இந்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் நிகழ்வில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, புத்த பெருமானால் மகாசங்கத்தினருக்கு போதிக்கப்பட்ட ஒழுக்கக்கோட்பாடுகள் பௌத்த சாசனத்தின் அடிப்படையாகவே காணப்பட்டது எனத் தெரிவித்தார்.

தேவநம்பியதீசன் மன்னர் ஆட்சி காலம் முதல் சிங்கள மன்னர்கள் பௌத்த மதத்தை நிலைநாட்டுவதற்கும் பௌத்த துறவற கிரியைகளை மேற்கொள்வதற்கும் அரச அனுசரணை வழங்கியதாக தெரிவித்த ஜனாதிபதி, இலங்கை ஆயிரம் வருடத்திற்கும் மேலாக தர்ம இராஜ்ஜியமாக விளங்குவதற்கு அதுவே காரணமாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆயிரக் கணக்கான வருடங்களாக மகா சங்கத்தினர் பின்தங்கிய கிராமங்களில் வசித்து தர்ம போதனைகளை மேற்கொண்டதன் காரணத்தினால் இலங்கை சமூக, பொருளாதார, ஆன்மீக வளர்ச்சியை அடைந்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம-3)

## ஜனாதிபதியின் கீழேயே உளவுத்துறை செயற்படுகிறது

### சட்டத்தரணி நீதிமன்றுக்கு அறிவிப்பு

21/4 உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தேசிய உளவுத்துறை ஒருபோதும் உறுதி செய்யப்பட்ட தெளிவான தகவல்களை முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர் னாண்டோவுக்கோ அல்லது பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கோ அளித்திருக்கவில்லை என அவர்களது சட்டத்தரணியான அனுஜ பிரேமரத்ன நேற்று கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவுக்கு அறிவித்தார்.

21/4 உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத் துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவும் நேற்று சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டனர்.

இந் நிலையில் அது தொடர்பில் அவ் விருவர் சார்பிலும் நேற்று கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் வாதங்களை முன்வைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தெளிவான உளவுத் தகவல்கள் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவுக்கும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு உளவுத்துறையால் வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெளிவானதாக அரசின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துஷித் முதலிகே நீதிமன்றில் தெரிவித்த போதும் அதனை பூஜித் மற்றும் ஹேமசிறியின் சட்டத்தரணி மறுத்தார்.

அத்துடன் தேசிய உளவுத்துறை நேரடியாக ஜனாதிபதிக்கே தகவல்களை அளிப்பதாகவும், அது ஜனாதிபதியின் கீழ் உள்ள துறை எனவும் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் 2015.01.08 ஆம் திகதி வெளியிட்ட 1897/15 எனும் விஷேட வர்த்தமானி பிரதியை மன்றில் சமர்ப்பித்து வாதிட்ட அனுஜ பிரேமரத்ன, கடந்த 2018 ஒக்டோபரின் பின்னர் பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு சபை கூட்டத்துக்கு கூட சேர்க்கப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் அன்றைய தினம் சந்தேக நபர்களின் பிணை மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தீர்மானிப்பதாக அறிவித்தார். (ம-3)

### ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 03-07-2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 953 |

ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 3 5 0 2 6 8

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2019-07-03 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 169 |

ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 15 16 35 60

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 03/07/2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 401 |

வெற்றி எழுத்து: T — சுப்பர் இலக்கம்: 02 — வெற்றி இலக்கங்கள்: 25 28 34 69

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2019.07.03 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2167 |

ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 18 24 45 55

தேசிய லொத்தர் சபை

# ரிஷாத் மீண்டும் பதவியேற்றால் விசாரணைக்கு தடையேற்படலாம்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு

அமைச்சர் பதவியில் இருந்து விலகிய ரிசாத் பதியுதீன் மீண்டும் அமைச்சர் பதவியை பெற்றுக் கொள்ள தயாராகி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். உதய கம்மன்பிலவை நேற்று மோசடி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கு சென்ற அவர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனை கூறியுள்ளார்.

ரிசாத் பதியுதீன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மன்னாரில் 3 ஆயிரம் ஏக்கர் காணி இருப்பதாக நான் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு தகவல் வழங்கியிருந்தேன். இதற்கு அமைய என்னை ஆணைக்குழு அழைத்திருந்தது.

என்னிடம் உள்ள தகவல்களுக்கு அமைய அந்த சொத்து ரிசாத் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் இடையில் பகிர்ப்பட்ட விதம்சம்பந்தமாக ஆணைக் குழுவிற்கு தெளிவுபடுத்தினேன்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பிரச்சினையின் போது முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தனக்கு அழுத்தங்களை கொடுக்கவில்லை என இராணுவ தளபதி பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கூறியிருந்தாலும், அதற்கு முன்னர் ஊடகங்களுக்கு முன்னால் இராணுவ தளபதி அப்படி கூறவில்லை.

இதன் மூலம் இராணுவ தளபதி ரிசாத் பதியுதீன் மீது அச்சம் கொண்டுள்ளது புரிந்துள்ளது. இவ்வாறான நிலைமையில் ரிசாத் பதியுதீன் மீண்டும் அமைச்சராக பதவியேற்றால், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு தடையேற்படலாம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் எவரும் எந்த சமயத்தையும் பின்பற்ற முடியும். விரும்பிய எந்த இனத்தவரையும் திருமணம் செய்ய முடியும். எனினும் தற்போது இது சம்பந்தமாக சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது.

எந்த சமயத்திற்கு அமையவும் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற முடியாது. அமுலில் உள்ள அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய சமயத்தை பின்பற்ற முடியும்.

இஸ்லாமிய வஹாபிச அடிப்படைவாதம் காரணமாக முஸ்லிம் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் பெண்கள் அதிகளவில் இதனால், கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை கைது செய்ததன் மூலம் தாக்குதல் சம்பந்தமாக பிரச்சினையை தீர்க்க முடியாது. தாக்குதல் நடத்தப்பட உள்ளது என்று அறிந்து அதனை மக்களுக்கு மறைத்த அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# தூக்குக்கு எதிரான மனு இன்று விசாரணைக்கு வருகிறது

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக மரணதண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள தீர்மானத்துக்கு இடைக்காலத் தடையுத்தரவு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு இன்று வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் யசந்தா கோட்டேகொட உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் ஆயம் நேற்று இந்த மனுவை பரிசீலித்தது.

இதன்பின்னர் இந்த மனு மீதான விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் மலிந்த செனவிரத்ன தாக்கல் செய்த மேற்படி மனுவைப் பரிசீலிக்க ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் ஆயம் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


**வேலைவாய்ப்பு**

எமது Everest நிறுவனத்தின் புதிய கிளைக்கான பதவி வெற்றிடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வரவேற்பாளர்
- விளம்பரப் பிரதிநிதி
- கண்காணிப்பாளர்

O/L மற்றும் A/L படித்தவர்கள் தொடர்புகொள்ளவும்

**தொடர்புகளுக்கு :**
**077 171 7278, 077 695 3242**

(9461)

**GREEN LIFE REAL ESTAT AGENT & CONSTRACTON**

- வீடு, காணி நியாய விலையில் விற்பதற்கும் வாங்குவதற்கும் தொடர்பு கொள்ளவும்.
- எம்மிடம் 69 காணித்துண்டுகள் 72 வீடுகள் உண்டு.
- இராஜவீதிக்கருகில் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட 3 துண்டுகள் உண்டு.

தொடர்புகளுக்கு : வீடு காணி முகவர்
G.P.S வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
**T.P : 077 555 9028**

(9451)

**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

A/L 2019 முன்னோடிப்பரீட்சை
(தொழில்நுட்ப பிரிவு)

**அனுமதி இலவசம்**

கடந்த வருடங்களில் முதல் நிலை பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் (68 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி

கலக்சிகா - நிலை - 01 - யாழ்ப்பாணம்
ரஜிதா - நிலை - 01 - முல்லைத்தீவு
விதுர்சன் - நிலை - 01 - கிளிநொச்சி

| காலம் | பாடம் |
|---|---|
| 09.07.2019 | பொறியியல் தொழில்நுட்பம் உயிர்முறைமைகள் தொழில்நுட்பம். |
| 10.07.2019 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 11.07.2019 | ICT, விவசாயவிஞ்ஞானம், சித்திரம், புவியியல் |

**அனுமதி இலவசம்**

Part - I 8.30 - 10.30
Part - II 11.00 - 02.00

பரீட்சை விடைகளும் இலவசமாக வழங்கப்படும் (Marking Scheme) (அனைத்துப்பிரதேச மாணவர்களும் வருகைதரலாம்)

**077 017 5346**

(C-6854)






**காரைநகர்**
**கிழவன்காடு கலாமன்றம்**
அறநெறிப் பாடசாலை நடத்தும்
**மாணிக்கவாசகர் குருபூசை விழா**

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு காரைநகர்
காலம் : 06.07.2019 சனிக்கிழமை பி.ப. 2.00 மணி



மூதறிஞர் கலாநிதி
**வைத்தீசுவரக்குருக்கள் அரங்கு**
நிகழ்ச்சிகள்
மாணவர்களின் நிகழ்வுகளாக

நாட்டிய அர்ப்பணம், திருவாசகம் ஓதல், பேச்சு, சிந்தனைக்கு ஒரு விருந்து
சொற்பொழிவு :- தலைப்பு - வான் கலந்த வாசகம்
வழங்குபவர் - செந்தமிழ் சொல்லருவி திரு.எஸ்.லலீசன் அவர்கள்
திருவாசகதேனிசை :- ஈழத்துப் பிரபல பண்ணிசைக் கலைஞர்கள்

**விவாத அரங்கு**
"தமிழர் பண்பாட்டு நிகழ்வுகள் தற்போது சமூகத்தில் தம் நோக்கிலிருந்து..."

| விலகிவிட்டன! | விலகவில்லை! |
|---|---|
| திரு.ந.ஐங்கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அமைச்சு, வட மாகாணம்) | திரு.இ.சர்வேஸ்வரா (விரிவுரையாளர், கல்வியற்துறை, யாழ்பல்கலைக்கழகம்) |
| காரை.சி.சிவாம்சன் (விஞ்ஞான பீட மாணவன்) | காரை.ஜெ.நிசாந்தன் (பயிலுநர் ஹற்றன் நஷனல் வங்கி மன்னார்) |
| திரு.ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ (சட்டத்துறை மாணவன், யாழ் பல்கலைக்கழகம்) | திரு.ஜீவா.சஜிவன் (கிராம அலுவலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) |

நடுவர் - காரை தமிழருவி த.சிவகுமாரன் அவர்கள்

குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்துச் சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து (இல. 428, கே.கே.எஸ்.வீதி, வண்ணை சிவன் கோவில் அருகாமை) பி.ப. 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம் - காரைநகர்

(C-6856)



வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
**எமரல்ட் ஐல்** தரும்
License No. 2268

**டுபாய்-கட்டார்-சவுதி-குவைத் வேலைவாய்ப்புக்கள்**

| | | |
|---|---|---|
| டுபாய் | SALES Merchandisers (ஆண் பெண் இருபாலாரும்) | ரூ.88,200 தொடக்கம் ரூ.98,000 |
| கட்டார் | துப்பரவுப் பணியாளர் (ஆண் பெண் இருபாலாரும்) | ரூ.49,200 தொடக்கம் ரூ.53,420 |
| சவுதி | JCB Operator, Excavator Operator, Mechanic, HVAC Technician | ரூ.78,400 தொடக்கம் ரூ.98,000 |
| குவைத் | ஜெனரேட்டர் டெக்னீசியன்/மெக்கானிக் | ரூ.116,000 ரூ.174,000 |
| | முன்பள்ளி ஆசிரிய உதவியாளர்கள் (பெண்கள்) | ரூ.87,000 |

குறிப்பு : பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்
0777 324 004, 077 00 38 215, 021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lover/Teen Girls க்கு அருகே
email: jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk

(C-6855)

**வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்கு வேலையாட்கள் (Female) தேவை. நேரில் வரவும்.

**கோலாசிற்றி**
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 182 3534

(9462)



**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**மாபெரும் விசேட செயலமர்வு**
2019 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கானது.....

| காலம் | நேரம் | பாடங்கள் |
|---|---|---|
| 12,13,14 | 8.30 - 2.30 | பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் |
| 15.16 | 8.30 - 2.30 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | 8.30 - 2.30 | ICT, விஞ்ஞானம், கணிதம் (7), புவியியல், ஊடகக்கல்வி |

புதிய பாடத்திட்டத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திலும்,
பழைய பாடத்திட்டத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பழைய பாடத்திட்டத்திலும் தனித்தனியான அமர்வுகள்

- ☆ தொழினுட்பப்பிரிவின் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.
- ☆ இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- ☆ எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
- ☆ அமர்வுகள் ஒவ்வொன்றும் கடந்த நான்கு வருடமாக தேசிய நிலையிலும், மாவட்டநிலையிலும் பல சாதனை மாணவர்களை உருவாக்கிய விஸ்டத்தின் அதே விசேட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.
- ☆ கையேடுகளைச் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளைப் மேற்கொள்ளவும்.
- ☆ வெற்றி பெறும் மாணவர்களின் தேர்வு விஸ்டம் தொழினுட்பக் கல்லூரியே.

முற்பதிவுகளுக்கு:- 021 221 7860 / 077 248 7774

☆☆☆☆☆☆ தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு ☆☆☆☆☆☆

(C-6846)

**விற்பனைக்கு**

வியாபார நிலையங்களுக்கான அலுமினிய சோக்கேஸ், ராக்கி என்பன உடன் விற்பனைக்குண்டு.

**077 128 1857**

(9453)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240
V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-6817)

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மாவிட்டபுரம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சுதுமலை, புத்தூர்

- எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால பயிற்சியுடன் வேலை வாய்ப்புக்கள் உண்டு.
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை 7'500/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

(C-6849)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.